வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu
ඊළනාඩු




Email : eelanaduweekly@gmail.com   மலர் : 05   19.12.2023 செவ்வாய்க்கிழமை   இதழ் : 351   பக்கங்கள் : 12

## அண்டை நாடுகளுக்கு இந்தியா உயிர் நாடி!

### இலங்கை நெருக்கடியின்போது இது வெளிப்பட்டது என்கிறார் ஜெய்சங்கர்



புதுடில்லி, டிசெம்பர் 19

இந்தியா ஒரு பிராந்திய தலைவர் மாத்திர மில்லை. அதன் அண்டை நாடுகளுக்கு மிக முக்கியமான உயிர் நாடி என தெரிவித்துள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய் சங்கர், இலங்கை சமீபத்தில் எதிர்கொண்ட பொரு ளாதார நெருக்கடியின்போது இது வெளிப் பட்டது என குறிப்பிட்டார்.

11

## இலங்கை அரசுக்கு எதிராக சர்வதேச நீதிமன்றில் வழக்கு

### கனடா கென்சவேர்ட்டிவ் கட்சி அறிவிப்பு

ஒட்டாவா, டிசெ. 19

கனடாவில் கென்சவேர்ட்டிவ் கட்சி ஆட்சியமைத்தால் சர்வதேச நீதி மன்றத்தில் இலங்கை அரசாங்கத்திற்கு எதிரான சட்ட நடவடிக்கைகளில் ஈடு படுவதற்காக நாங்கள் கனடாவின் வெளிவிவகார அமைச்சின் சட்டத் தரணிகளை பயன்படுத்துவோம் என அந்தக் கட்சியின் தலைவர் பியர் பொலியர் தெரிவித்துள்ளார்.

கனடாவின் ஊடகமொன்றிற்கு வழங்கிய பேட்டியில் கனடாவில் கென்சர்வேட்டிவ் கட்சி ஆட்சிய மைத்தால் தமிழர்கள் இனப்படு கொலை தொடர்பில் என்ன நிலைப் பாட்டை எடுக்கவுள்ளீர்கள் என்ற கேள்விக்கு பதிலளிக்கையில் அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

1980 களில் கனடாவுக்கு பெரு மளவு புலம்பெயர்ந்த தமிழர்களை முதலில் வரவேற்றவர் கென்சவேர்ட் டிவ் கட்சியின் அப்போதைய பிரதமர் பிரையன் முல்ரோனி.

இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக முதலில் சர்வதேச தடைகளை விதித்தது, கொழும்பில் இடம் பெற்ற பொதுநலவாய உச்சி

11

## தமிழரசின் அரசியல் குழு திருமலையில் கூடியது!

திருமலை, டிசெ. 19

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் அரசியல் குழுக் கூட்டம் தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட் டக் கிளைப் பணிமனையில் நேற்று நடைபெற்றது.

தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதி ராசா தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் எதிர்வரும் ஜனவரி மாதம் 28 ஆம் திகதி திருகோண மலையில் நடைபெறவுள்ள கட்சியின் 17 ஆவது தேசிய மாநாடு தொடர்பிலும், அதையொட்டி நடைபெறவுள்ள பொதுக் கூட்டம்

11

## கில்மிஷாவுக்கு ரணில் வாழ்த்து!

கொழும்பு, டிசெ. 19

ஷீ தமிழ் தொலைக்காட்சியின் சரிகமப இசை போட்டி நிகழ்ச்சியில் பட்டம் வென்ற யாழ்ப்பா ணத்தை சேர்ந்த கில்மிஷாவுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் பிரபல தனியார் தொலைக்காட்சி யான ஷீ தமிழ் சரிகமப இசை போட்டி நிகழ்ச்சியை நடத்தியது. இதில், யாழ்ப்பா ணத்தை சேர்ந்தவரான உதயசீலன் கில்மிஷா,

11

## சுதந்திர மக்கள் பேரவையால் ஜனாதிபதி ரணிலுக்கு அச்சம்!

### கூறுகின்றார் டிலான் பெரேரா

கொழும்பு, டிசெ. 19

சுதந்திர மக்கள் பேரவையில் அங்கம் வகிக்கும் பதின் மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒன்றாக இருப் பதை கண்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அஞ்சு வதாக பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா குற்றம் சாட்டியுள்ளார்.

ஆகவே அதனை பிளவுபடுத்த ஜனாதிபதி முயற்சிக்கிறார் என அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா குற்றம்

11

## ஜனவரி 28இல் தமிழரசின் தேசிய மாநாடு!

திருமலை, டிசெ. 19

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தேசிய மாநாடு திருகோணமலை யில் திட்டமிட்டபடி இடம்பெறும் என்று கட்சியின் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பின ருமான எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

தமிழ் அரசுக் கட்சியின் திருகோணமலை மாவட் டக் கிளையில் இன்று நடைபெற்ற அரசியல் குழுக் கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண் டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரி விக்கையில்,

யாப்பின் அடிப்படை யில் திருகோணமலை மாவட்டத்தில் தமிழ் அரசுக் கட்சியின் தேசிய மாநாடு நடைபெற இருப் பதால் விழாக் குழுவாகக் கட்சியின் திருகோணமலை மாவட்டக் கிளை செயற் பட்டு வருகின்றது.

இதனடிப்படையில் எதிர்வரும் 2024 ஜனவரி 21 ஆம் திகதி பொதுச் சபை கூடி புதிய தலைவர் மற்றும் புதிய நிர்வாகிகள் தெரிவு இடம்பெறவுள் ளது. 26ஆம் திகதி மத்திய செயற்குழு கூடவுள்ளது. 27 ஆம் திகதி பொதுக் கூட்டம் இடம்பெற வுள்ளது. 28 ஆம் திகதி தமிழ் அரசுக் கட்சியின் 17ஆவது தேசிய மாநாடு இடம்பெறவுள் ளது.

11



## கிளிநொச்சியில் வெள்ளத்தினால் மக்கள் பாடசாலைகளில் தஞ்சம்!

கிளிநொச்சி, டிசெ. 19

கிளிநொச்சியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக் கள் பாடசாலைகளில் தஞ்சமடைந்துள்ளனர். கண்டா வளை பிரதேச செயலாளர் பிரிவில், கண்டாவளை பிர தேசத்தில் 321 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள் ளதுடன், 96 குடும்பங்கள் பாடசாலையில் தஞ்ச மடைந்துள்ளன.

11

## அமெரிக்கா பறந்தார் பஸில்?

கொழும்பு, டிசெ. 19

முன்னாள் நிதியமைச் சர் பஸில் ராஜபக்ஷ மீண் டும் அமெரிக்காவிற்கு பயணித்துள்ளதாக அர சியல் வட்டாரத் தகவல் கள் தெரிவிக்கின்றன.

இவர் டுபாய் ஊடாக அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகருக்கு பயணித்துள்ளதாக தெரிவிக்கப்

11

## தொடர்ந்து கொட்டுகிறது மழை!

### முல்லைத்தீவு மாவட்டத்தில் 3, 463 பேர் பாதிப்பு

முல்லைத்தீவு, டிசெ. 19

முல்லைத்தீவு மாவட் டத்தில் இடைவிடாது பெய்துவரும் கன மழை காரணமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள அனைத்து குளங்களும் முற்று முழுதாக நிறைந்து வான் பாய்கின்ற நிலை யில் பல்வேறு பகுதிகள் வெள்ளத்தால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

முத்து ஐயன்கட்டுக் குளம் 4 வான் கதவுகளும் திறக்கப்பட்டுள்ளன. முத்து ஐயன்கட்டு, பேராறு, முத்துவிநாயகபுரம், பண் டாரவன்னி, வசந்தபுரம், மன்ன கண்டல் ஆகிய கிராம மக்களை மிக அவ தானமாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள் ளது.

இதேவேளை, புதுக் குடியிருப்பு - ஒட்டுசுட் டான் வீதியில் மன்னா கண்டல் பகுதியில் வெள்ளநீர் வீதியை குறுக்கறுத்து பாய்வதால் வீதி

11

## 26 பாடசாலைகள் பூட்டு!

யாழ்ப்பாணம, டிசெ. 19

வடக்கு மாகாணத்தில் கொட்டித் தீர்க்கும் மழை காரணமாக நேற்று 26 பாடசாலைகள் இயங்கவில்லை.

வடக்கில் தொடரும் கனமழையால் பல பாடசாலை கள் இடைத்தங்கல் முகாம்களாகவும், மேலும் சில பாடசாலைகள் நீரினால் சூழப்பட்டமை யாலும் இயங்க முடியாத நிலை காணப்படுகின்றது.

11

## மன்னாரில் 2,245 பேர் பாதிப்பு!

மன்னார், டிசெ. 19

சீரற்ற காலநிலையால் மன்னார் மாவட்டத்தில் 632 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 245 பேர் பாதிக்கப்பட்டுள் ளனர்.

168 குடும்பங் களைச் சேர்ந்த

11

# இப்படியும் நடக்கிறது

இலங்கையின் இன்றைய அரசியல் தலைவர்களில் மேற்கின் தெரிவு யார் என்பது நமக்கு வேறு யாரும் சொல்லித் தந்து தெரியவேண்டியதில்லை.

மேற்கின் தெரிவு என்றால், அமெரிக்காவின் தெரிவு என்பதுதான் அதன் பொருள். அமெரிக்கா எப்போதும் தான் விரும்பிய ஒருவருக்கு உதவி செய்யவேண்டும் என்றால் நேரடியாகக் களத்தில் இறங்கி உதவுவதில்லை. அதன் திட்டங்களை நிறைவேற்றுவதற் கென்றே சில நாடுகளை வைத்திருக்கின்றது. நோர்வே, சுவிற்சர்லாந்து ஆகியவை இதில் முக்கியமானவை.

இதனால்தான் இந்த நாடுகள் இலங்கை விவகாரங்களில் அதிக நாட்டம் காட்டுவதுடன், இங்கு இயங்கும் அரச சார்பற்ற நிறுவனங்களை (என். ஜி. ஓ.) தமது தேவைகளுக்கு பயன்படுத்திக்கொள்கின்றன.

இவ்வாறு சுவிற்சர்லாந்தின் அனுசரணையுடன் செயல் படும் சில என். ஜி. ஓக்களின் உதவியுடன் அண்மையில் நடந்தேறியதுதான் உலகத் தமிழர் பேரவை என்ற குழு வினர் நடத்திய ஓரங்க நாடகம். இது குறித்து பலரும் தொடர்ந்து எழுதி வருகின்றனர். அவ்வாறு எழுதுகின்றவர்கள் அனைவருமே தத்தமக்குத் தெரிந்த தகவல்களை அல்லது அனுமானங்களை வைத்தே எழுதுகிறார்கள். இந்த ஊர்க்குருவியும் அதற்கு விதி விலக்கு அல்ல.

அந்த நாடகத்தை ரணிலுக்கு வெள்ளையடிக்கும் முயற்சி என்று கஜேந்திர குமார் பொன்னம்பலம் கூறினார். கூடவே, மக்கள் மத்தியில் தாம் இழந்துபோயிருக்கும் செல்வாக்கை மீள நிலை நிறுத்திக்கொள்வதற்காக தமி ரசுக் கட்சி இதனை செய்வதாகவும் அவர் வேறு சொல்லியிருந்தார்.

உடனே, அதனை மறுத்த சுமந்திரன் அதற்கும் தமிழரசுக்கும் குறிப்பாகத் தனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று அறிக்கை வெளியிட்டார். அந்த அறிக்கையைப் படித்தவர்கள் நம்பினார்களா என்பது வேறு விடயம். ஆனால், அவர் அந்த மறுப்பில் இன்னுமொரு விடயத்தையும் சேர்த்திருந்தார், அதாவது, அதற்கும் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று.

அங்கேதான் நமக்கு ஒரு கேள்வி எழுவதைத் தவிர்க்க முடியவில்லை. அந்த முயற்சிக்கும் ரணிலுக்கும் தொடர்பு இல்லை என்றால் அதனை ரணில் மறுத்திருக்க வேண்டும். அல்லது உலகத் தமிழர் பேரவை மறுத்திருக்க வேண்டும். ஆனால், சுமந்திரன் மறுக்கிறார் என்றால் அவர் இப்போது ரணிலின் பிரதி நிதியாக இருக்கவேண்டும் அல்லது உலகத் தமிழர் பேரவை யின் பிரதிநிதியாக இருக்கவேண்டும். இரண்டு பேருடனும் அவருக்கு தொடர்பு இல்லை என்றால் இவர் ரணில் தரப்புக்கு தொடர்பு இல்லை என்று சொல்லியிருக்க முடியாது.

இதுவல்ல நாம் இன்று சொல்ல வருவது,

கனடாவிலிருந்து நண்பர் ஒருவர் தொடர்புகொண்டு கேட்டார், இந்த இமாலய பிரகடனம் ரணிலுக்கு வெள்ளையடிப்பதற்காக செய்யப்படுகின்றது என்கிறார்களே, இதனால் ரணில் எப்படி வெள்ளையடிக்கப்படுகிறார்? என்று.

அவருடைய கேள்வி நியாயமானதுதான். ஆனால், ரணில் கடந்த ஆண்டு ஜனாதிபதி யாகத் தெரிவாகும் வரை உல கத் தமிழர் பேரவை என்பது இலங்கையில் தடை செய் யப்பட்ட இயக்கம். அதாவது அது புலிகளின் தனி நாட்டு கோரிக்கைக்காக இயங்கிக் கொண்டிருக்கின்ற இயக்கம். அப்படித்தான் சிங்கள மக்கள் நம்ப வைக்கப் பட்டிருக்கின்றனர்.

அதாவது, புலிகளின் கொள்கையை அடைய போரா டிக் கொண்டிருக்கின்றதாக சிங்கள மக்கள் நம்பிக்கொண் டிருந்த ஓர் இயக்கத்தை, பௌத்த தேரர்களுடன் சேர்ந்து நாட்டின் இறையாண் மையை பாதுகாக்க பிரகடனம் ஒன்றை வெளியிட வைத்திருக்கிறார்கள் என்றால், அது ரணிலின் தலைமைக்குக் கிடைத்திருக்கின்ற வெற்றியாகத்தானே சிங்கள மக்களுக்கு தெரியும்?

உலகத் தமிழர் பேரவை என்ற பெயரில் இயங்கிய ஓர் என். ஜி. ஓவை புலிகளின் பினாமியாக சிங்கள மக்களை நம்பவைத்துவிட்டு, இப்போது அது இலங்கையின் இறையாண்மையை மதிக்கின்ற அமைப்பாக மாற்றியிருக்கிறார் ரணில் என்றுதான் சிங்கள மக்கள் இப்போது நம்பிக் கொண்டிருக்கிறார்கள்.

இன்று தமிழர் தரப்பில் இருந்து தொடர்ச்சியாக உலகத் தமிழர் பேரவைக்கு எதிராக வெளிவருகின்ற அறிக்கைகள் எதுவும் எந்த ஒரு சிங்கள ஊடகத்திலும் வெளிவருவதில்லை. அவற்றை தமிழ் ஊட ங்கள் எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்து பிரசுரித்தாலும் அதனால் எந்த தாக்கமும் சிங்கள மக்கள் மத்தியில் ஏற் படப்போவதில்லை. மேற்கு லகின் பிரசாரம்தான் இப் போது தெற்கில் கொடி கட்டிப்பறக்கின்றது.!

**- ஊர்க்குருவி.**

# சதொச ஊடாக 35 ரூபாவுக்கு முட்டை!

கொழும்பு, டிசெ. 19

இறக்குமதி செய்யப்படும் முட்டைகள் லங்கா சதொச ஊடாக 35 ரூபாய் என்ற விலையில் விநியோகிக்கப்படும் என அரச வர்த்தக கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட 10 மில்லியன் முட்டைகள் நேற்று முதல் விற்பனைக்காக சந்தைக்கு வெளியிடப்பட்டுள்ளன.

கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் அனுமதியுடன் உரிய முட்டைகள் லங்கா சதொச நிறுவனத்திற்கு இன்று முதல் விநியோகிக்கப்பட்டுள்ளன.

இதன்படி, சதொச கடைகளின் ஊடாக மக்கள் பண்டிகைக் காலங்களில் முட்டைகளை தட்டுப்பாடு இன்றி கொள்வனவு செய்ய முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு, மேலும் 15 மில்லியன் முட்டைகள் நாட்டுக்கு இறக்குமதி செய்யப்படவுள்ளதுடன், அந்த கையிருப்புக்களை விரைவில் தரப் பரிசோதனைக்கு அனுப்பவும் நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் உள்ளூர் முட்டை உற்பத்தியாளர்கள் பல சந்தர்ப்பங்களில் முட்டை விலையை அதிகரிக்க நடவடிக்கை எடுத்ததால், நுகர்வோர் பாதிக்கப்படுவதை தடுக்கும் வகையில் இந்தியாவில் இருந்து முட்டைகளை இறக்குமதி செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது.

எவ்வாறாயினும், முட்டை இறக்குமதியை நிறுத்துவதாக அரசாங்கம் அறிவித்துள்ள நிலையில், உள்ளூர் முட்டை ஒன்றின் விலை மீண்டும் 55 முதல் 65 ரூபா வரை அதிகரித்துள்ள நிலையில், மீண்டும் முட்டையை இறக்குமதி செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

நுகர்வோர் அசௌகரியங்களுக்கு உள்ளாவதை தடுக்கும் வகையில் எதிர்காலத்தில் பல அதிகார வரம்புகளின் கீழ் இந்தியாவில் இருந்து முட்டைகளை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(அ)

# போதைப்பொருள் குற்றவாளிகளுக்கு பிணை வழங்குவதை நிறுத்தவேண்டும்

## மைத்திரிபால சிறிசேன கோரிக்கை



கொழும்பு, டிசெ. 19

போதைப்பொருட்களுடன் கைது செய்யப்படுவர்களுக்கு பிணை வழங்கப்படுவதை அரசாங்கம் நிறுத்தவேண்டுமென முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எமது நாட்டின் நீதிமன்றங்களில் 13 இலட்சத்து 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வழக்குகள் விசாரணைக்காக உள்ளன.

தற்போது 14 இலட்சத்தை இது நெறுங்கியுள்ளது.

இந்த வழக்கு விசாரணைகள் தாமதமடைவதால், அந்த வழக்குகளில் தொடர்புடைய குற்றவாளிகள் இன்னும் பல குற்றங்கில் ஈடுபடுவார்கள்.

தற்போதைய அரசாங்கம், ஐஸ். அஷிஸ் உள்ளிட்ட போதைப்பொருட்களுடன் கைது செய்யப்படுவர்களுக்கு பிணை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது.

சிறைச்சாலைகளில் இடவசதி இல்லாதமையே இதற்கான காரணமாகும். இது உண்மையில் வேடிக்கையான விடயமாகும்.

இந்த நாட்டில் போதியளவு இடவசதி உள்ளது. இராணுவம் நினைத்தால் ஒரே மாதத்தில் அங்கு புனர்வாழ்வு நிலையங்களை அமைக்க முடியும்.

நீதிமன்றங்களில் நிலுவையிலுள்ள வழக்குகளை துரிதமாக முடிக்க வேண்டும். சில வழங்குகள் 20 வருடங்கள் நடக்கின்றன.

இன்னும் சில வருடங்கள், 3 தலைமுறைகளாகக்கூட நடந்து வருகின்றன. குறைந்தது 6 மாதங்களில் ஏனும் வழங்குகளை முடிப்பதற்கான சட்டங்களை நாடாளுமன்றில் கொண்டுவரவேண்டும் - என்றார். (அ)

# மாணவர்களிடையே வாய் புற்றுநோய் அபாயம்!

கொழும்பு, டிசெ. 19

பாடசாலை மாணவர்களுக்கு இடையே வாய் புற்றுநோய் அதிகரிக்கும் அபாயம் காணப்படுவதாக மருத்துவர்கள் எச்சரிக்கின்றனர்.

பாடசாலை மாணவர்கள் மற்றும் இருபது வயதுக்குட்பட்ட இளைஞர்களுக்கு வாய் மற்றும் உதடுகளைச் சுற்றி வெள்ளை நிறம் காணப்பட்டால், அது வாய் புற்றுநோயின் அறிகுறியாக இருக்கலாம் என்றும் மருத்துவர்கள் கூறுகின்றனர்.

குறிப்பாக பாடசாலை மாணவர்கள் பொதி செய்யப்பட்டுள்ள வெற்றிலை பாக்கினை சாப்பிட பழகியுள்ளதே இந்த நிலைக்குக் காரணம் என்று தேசிய பல் மருத்துவ மனையின் வாய்வழி நோயியல் அறுவைச் சிகிச்சை நிபுணர் வைத்தியர் ஏ.எச்.பி.எஸ். கருணாதிலக இதனைத் தெரித்துள்ளார்.

இதை பெற்றோர்கள் உணர்ந்து, அதிலிருந்து அவர்களைக் காப்பாற்ற பாடுபட வேண்டும் என்று நிபுணர் வலியுறுத்தினார்.

தேசிய பல் மருத்துவ மனைக்கு தினமும் 5-20 பேர் வாய் புற்றுநோய் மற்றும் புற்றுநோய்க்கு முந்தைய நோயாளிகள் வருவதாகவும், அவர்களில் பெரும்பாலானோருக்கு வாய் புற்றுநோய்க்கு ஆரம்ப நிலையிலேயே எளிதில் சிகிச்சை அளிக்க முடியும் என்றும் அவர் கூறினார்.

குறிப்பாக பாடசாலை மாணவர்கள் தொடர்பில் பாடசாலை பல் அறுவை சிகிச்சை மருத்துவர் ஊடாக நடவடிக்கை மேற்கொள்ள முடியும் என்றும், இல்லையெனில் சிகிச்சைக்காக மருத்துவ அதிகாரி அலுவலகத்தில் இணைக்கப்பட்டுள்ள பல் சிகிச்சையாளரை சந்திப்பது பொருத்தமானது என்றும் அவர் நினைவு கூர்ந்தார்.

பெரும்பாலும் வெற்றிலை உண்பதால் வாய் புற்றுநோய் ஏற்படுவதாகவும், நாற்பத்தொன்பது சதவீதம் பேர் வெற்றிலையுடன் புகையிலையை உண்பதாகவும் தெரிய வந்துள்ளது.

இந்நிலை தவிர்க்கப்பட வேண்டும் என நிபுணர் சுட்டிக் காட்டியுள்ளார்.

அதன்படி வாரத்திற்கு ஒரு முறையாவது வாய் பரிசோதனை செய்வது அவசியம் என்றும் அவர் வலியுறுத்தினார். (அ)

**யாழ்.கச்சேரிக்கு அருகில் காணி உடன் விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அருகில் 3½ பரப்புக் காணி, இரண்டு வெட்டுக் கிணறுகளுடன் உடன் விற்பனைக்குண்டு. இந்தக் காணி சுண்டுக்குழி தபால் நிலையத்துக்கு அருகில் – கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்துள்ளது. 55 மில்லியனுக்கு (5 கோடியே 50 லட்சம்) மேலான விலை எதிர்பார்க்கப்படுகிறது.

தொடர்புகளுக்கு : +447963743585 (Whatapp),
0212227141(Sri Lanka)
E.mail : Jamesraj_uk@yahoo.co.uk

ஈழநாடு
Eelanadu
19.12.2023 செவ்வாய்க்கிழமை
சோபகிருது வருடம், மார்கழி 02

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# ரணிலை விடுத்து உங்களை பாருங்கள்...!

இலங்கை தமிழரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழரசு கட்சியின் தலைமைக்கான போட்டியில் ஈடுபட்டிருப்பவருமான எம். ஏ. சுமந்திரன் - ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலது பக்கம் சிக்னலை போட்டுவிட்டு இடது பக்கம் வாகனத்தை செலுத்தும் ஒருவர் - அவர் ஜனாதிபதி தேர்தலை நடத்தப் போவதாகக் கூறிவிட்டு பாராளுமன்றத்தை கலைத்து விடுகின்றாரோ தெரியவில்லை என்று தெரிவித்திருக்கின்றார். சுமந்திரன் கடந்த காலத்தில் ரணில் விக்கிரமசிங்கவோடு நெருக்கமான தொடர்பிலிருந்தவர். ரணிலின் புத்திக்கூர்மை தொடர்பில் சிலாகித்துப் பேசியவர். எனவே, இந்தப் பின்புலத்தில் நோக்கினால் ரணில் தொடர்பில் சுமந்திரன் கூறுவதை கவனமாக நோக்கத்தான் வேண்டும்.

ரணில் தந்திரம் மிக்கவர் என்னும் கருத்து அரசியல் வட்டாரங்களுக்கு புதிதல்ல - குறிப்பாக, ரணிலை ஒரு நரியென்று வர்ணிக்கும் போக்கு தமிழ்த் தேசிய அரசியல் பரப்பில் உண்டு. ஆனால், இதிலுள்ள முரண்பாடான விடயம் என்னவென்றால் ரணிலின் நரித்தனம் அவருக்கு இது வரையில் கைகொடுக்கவில்லை. அவரை, தமிழர்கள் நரியென்று கூறிக் கொண்டாலும்கூட, சிங்கள மக்கள் அவரை ஒரு நரியென்று ஒருபோதுமே கருதியதில்லை. இதன் காரணமாக ரணிலின் ஜனாதிபதி கனவு இது வரையில் கைகூடவில்லை. 2005இல், ஜனாதிபதி கதிரை ரணிலுக்கு நெருக்கமாக இருந்தது. ஆனாலும் விடுதலைப் புலிகளின் தேர்தல் பகிஷ்கரிப்பு நகர்வால் ரணிலின் வெற்றிவாய்ப்பு கைநழுவியது. இதன் காரணமாகத்தான் அவ்வப்போது 2005இல் விட்ட தவறை மீண்டும் விட்டு விடாதீர்கள் என்று ரணில் கூறுவதுண்டு.

ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் பாராளுமன்ற தேர்தல் ஒன்றை நடத்துவதன் மூலம் ரணில் எதனை சாதிக்க முடியுமென்னும் கேள்வியுண்டு. ஏனெனில், ஜனாதிபதிதான் ரணிலின் இலக்கு - அந்த இலக்குக்கு பாராளுமன்ற தேர்தல் கைகொடுக்குமா? இந்தக் கேள்வியிலிருந்துதான் விடயங்களை கணிக்க வேண்டும். ராஜபக்ஷக்கள் மீளவும் தங்களை பலப்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்ற சூழலில் - அதேவேளை, ஜே. வி. பியின் செல்வாக்கு அதிகரித்து இருப்பதான கணிப்புகள் வெளிவருகின்ற சூழலில் - பாராளுமன்ற தேர்தலுக்கு செல்வதன் மூலம் இந்த நிலைமைகளில் எவ்வாறான மாற்றங்களை ஏற்படுத்த முடியும்?

ஜனாதிபதி தேர்தல் தொடர்பான அறிவிப்பு இதுவரையில் புதிராகவே இருக்கின்றது. - அதாவது, ரணில் விக்கிரமசிங்க தேர்தலுக்கான வியூகங்களை வகுக்கின்றார் என்னும் செய்தி வெளிவருகின்ற போதிலும்கூட, ரணில் எந்த அடிப்படையில் போட்டியிடப் போகின்றார் என்பது தொடர்பில், இறுதியான முடிவுகள் வெளிவரவில்லை. ராஜபக்ஷக்கள் என்ன செய்யப் போகின்றனர் - சஜித் பிரேமதாஸ அணி என்ன செய்யப் போகின்றது - மொட்டு அணியிலுள்ள அதிருப்தி அணிகள் என்ன செய்யப் போகின்றன - மலையக மற்றும் முஸ்லிம் கட்சிகள் என்ன செய்யப் போகின்றன? - இந்தக் கேள்விகளுக்கு பதில் இல்லை. காரணம் இதுவரையில் எவரிடமிருந்தும் தீர்க்கமான முடிவுகள் வெளிவரவில்லை.

இவ்வாறானதொரு சூழலில் - வலது பக்கம் சிக்னல் போடுவதா அல்லது இடது பக்கம் போடுவதா என்பதற்கு ரணிலிடம்கூட தெளிவான புரிதல் இருக்கும் என்பது சந்தேகமே. எனினும், ரணில் விக்கிரமசிங்கவுடன் நெருக்கிப் பழகிய சுமந்திரன் கூறுவது போன்று, ரணில் தந்திரங்கள் புரிய முயற்சிக்கலாம் - ஆனால், அவ்வாறான தந்திரக் கணக்குகளுக்கு மத்தியில் தமிழ்த் தேசிய கட்சிகள் என்ன செயல்லாம் - எவ்வாறான தந்திரங்களை தமிழ் மக்களுக்காக மேற்கொள்ளலாம் என்பது தொடர்பில்தான் சிந்திக்க வேண்டும். ரணில் எந்தப் பக்கம் சிக்னல் போட்டாலும் அதனை எதிர்கொள்வதற்கான தயார் நிலையில் தமிழ் அரசியல் சமூகம் இருக்க வேண்டும்.

# பொலிஸாருக்கு 6 மாதங்கள் காலக்கெடு!

*கொழும்பு, டிசெ. 19*

நாட்டில் தலைவிரித்தாடும் குற்றச்செயல்களை கட்டுப்படுத்தி - அவற்றை முற்றாக தடுப்பதற்கு பொலிஸாருக்கு ஆறுமாத கால கெடுவை வழங்கியுள்ளார் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ்.

இந்த இலக்கை அடைவதற்கான பயணத்தின்போது எந்தவொரு அழுத்தங்களுக்கும் அடிபணிய வேண்டாம் எனவும், பொலிஸாருக்காக தான் முன்னின்று செயற்படுவார் எனவும் அமைச்சர் அறிவித்துள்ளார்.

பொலிஸ் அதிகாரிகளுடன் நடைபெற்ற உயர்மட்ட கலந்துரையாடலின்போதே அமைச்சர் டிரான் அலஸ் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-



பொலிஸார் தமது கடமையை சரிவர நிறைவேற்ற வேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பாகும். பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சராக எனக்கென இலக்கொன்று உள்ளது. அடுத்த ஆறு மாதங்களுக்குள் நாட்டில் பாரியதொரு மாற்றத்தை பொலிஸார் ஏற்படுத்த வேண்டும். நாட்டில் குற்றச்செயல்களை தடுப்பது பிரதான இலக்கு. இந்த இலக்கை நோக்கி பயணிக்கும்போது எவராவது தடுக்க முற்பட்டால், தடைகளை தகர்த்துக்கொண்டு முன்னோக்கி செல்வதே எனது பழக்கம். பலம் வாய்ந்த நபராக இருந்தாலும் எனது அணுகுமுறை மாறாது.

எனவே, நாம் அனைவரும் இணைந்து இதனை செய்வோம். அச்சமின்றி பொலிஸார் பணியை ஆற்றுங்கள். உங்களுக்காக நான் முன்னிலையாவேன். எந்தவொரு தலையீடுகளுக்கும் இடமளிக்கப்போவதும் இல்லை. பொலிஸாருக்கு அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டால் அது பற்றி என்னிடம் அல்லது பொலிஸாரிடம் தெரியப்படுத்துங்கள். அழுத்தங்களுக்கு அடிபணிய வேண்டாம்.

ஜூன் 31 ஆம் திகதிக்குள் நாட்டில் அனைத்து மாகாணங்களிலும் மாவட்டங்களிலும் மாற்றமொன்று அவசியம். குற்றச்செயல்களை தடுப்பதற்கு மக்களும் எமக்கு ஆதரவு வழங்க வேண்டும் - என்றார். (அ)

# தேசிய பொங்கல் விழா இம்முறை மலையகத்தில்?

*கொழும்பு, டிசெ. 19*

பதுளை மாவட்ட தமிழ் அமைப்புக்களின் கோரிக்கையின் பிரகாரம் 2024ஆம் ஆண்டுக்கான தேசிய தைப் பொங்கல் விழாவை இம்முறை, தமிழ் மக்கள் செறிந்து வாழும் ஊவா மாகாணத்தை மையப்படுத்தி பண்டாரவளை நகரில் கொண்டாடுவதற்கு ஆவன செய்யுமாறு கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார் புத்தசாசன, சமய விவகார, கலாசாரத்துறை அமைச்சர் விதுர விக்கிரமநாயக்கவிடம் உத்தியோகபூர்வமாக கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்கவுக்கு அனுப்பிவைத்துள் கடிதத்தில் அவர் மேலும் கூறியுள்ளதாவது:-

தமிழர்களின் உன்னதமான திருநாளாக தைப் பொங்கல் திருநாள் ஆண்டுதோறும் ஜனவரி மாதம் கொண்டாடப்பட்டு வருகிறது. அந்த வகையில் இம்முறையும் 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 14ஆம் திகதி தைப்பொங்கல் திருநாள் உலகத் தமிழர்களால் கொண்டாடப்பட இருக்கிறது.

இவ்வாறான நிலையில் இலங்கையில் வருடந்தோறும் கொண்டாடப்படுகின்ற தேசிய தைப்பொங்கல் விழாவானது பெரும்பாலும் தமிழ் மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்டுள்ள வடக்கு, கிழக்கு மாகாணங்களை மையமாகக் கொண்டு நடத்தப்பட்டு வருகிறது.

இதனால் தமிழ் மக்களை பெரும்பான் மையாக கொண்டுள்ள ஊவா மாகாண தமிழ் மக்கள் தேசிய தைப்பொங்கல் விழாவை கொண்டாடுவதற்கான சந்தர்ப்பம் தொடர்ந்தும் கைநழுவிப் போகிறது.


ஆகவே 2024ஆம் ஆண்டுக்கான தேசிய தைப்பொங்கல் விழாவை இம்முறை ஊவா மாகாணத்தை மையப்படுத்தி பதுளை மாவட்டத்தில் பண்டாரவளை நகரில் கொண்டாடுவதற்கு வழிவகைகளை ஏற்படுத்திக் கொடுக்குமாறு பதுளை மாவட்ட தமிழ் அமைப்புக்கள் கோரிக்கை விடுத்திருக்கின்றன.

தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற ஊவா மாகாணத்தில் இம்முறை சமய மற்றும் கலாசார நிகழ்வோடிணைந்த தேசிய தைப்பொங்கல் விழாவை பண்டாரவளை நகரில் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமாக இருந்தால் அது இந்த உற்சவத்தின் மகிமையை மேம்படுத்துவதுடன் பெருந்தோட்டத்துறை சார்ந்த மக்களும் பங்குபற்றுவதற்கான சந்தர்ப்பமாகவும் இது அமைந்திருக்கும் என் பதை தங்களின் மேலான கவனத்துக்கு கொண்டுவருகிறேன்.

ஆகவே ஊவா மாகாண தமிழ் மக்களின் கோரிக்கையை கருத்திற்கொண்டு 2024ஆம் ஆண்டுக்கான தேசிய தைப்பொங்கல் விழாவை பண்டாரவளை நகரில் நடத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மிகத் தயவாக கேட்டுக்கொள்கிறேன் எனக் குறிப்பிட்டுள்ளார்.

(அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



டிசெம்பர்- 19 செவ்வாய்க்கிழமை
சோபகிருது வருடம் - மார்கழி 03
நல்ல நேரம் : 07.30 - 09.00
ராகு காலம் : 03.00 - 04.30
திதி : சப்தமி




**மேடம்**
உங்களின் இலக்கை நோக்கி முன்னேறுவீர்கள். பிரபலங்களால் ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் பழைய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். நினைத்தது நிறைவேறும் நாள்.

**இடபம்**
ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். பெரியோரின் ஆசி கிட்டும். வியாபாரத்தில் புதுவாடிக்கையாளர்கள் அறிமுகமாவார்கள் உங்கள் புது முயற்சிகளை மேலதிகாரி ஆதரிப்பார்கள்.

**மிதுனம்**
உங்கள் போக்கில் கொஞ்சம் மாற்றம் செய்வீர்கள். பிள்ளைகள் கேட்டதை வாங்கித் தருவீர்கள். முக்கிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள். அலுவலகத்தில் மரியாதை கூடும்.

**கடகம்**
சந்திராஷ்டமம் நீடிப்பதால் பழைய கசப்பான சம்பவங்களை நினைவுக்கு வரும். புதியவர்களை நம்பி ஏமாற வேண்டாம். உத்தியோகத்தில் அதிகாரிகளால் அலைக்கழிக்கப்படுவீர்கள்.

**சிம்மம்**
கணவன் மனைவிக்குள் ஆரோக்யமான விவாதங்கள் வந்து போகும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த லாபம் வரும். மேலதிகாரி ஒத்துழைப்பார். தன்னம்பிக்கை பிறக்கும் நாள்.

**கன்னி**
சமயோசிதமாகவும் சாதுரியமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். வியாபாரத்தில் பற்று வரவு உயரும். உத்தியோகத்தில் உங்களின் ஆலோசனைகள் ஏற்கப்படும். நினைத்தது நிறைவேறும் நாள்.

**துலாம்**
மற்றவர்களை நம்பி எந்த வேலையையும் ஒப்படைக்கக் கூடாது என்று முடிவெடுப்பீர்கள். வியாபாரத்தில் கடையை விரிவுபடுத்துவீர்கள். உத்தியோகத்தில் புது பொறுப்புகள் தேடி வரும்.

**விருட்சிகம்**
கடந்த கால இனிய அனுபவங்களை நினைவுக் கூர்ந்து மகிழ்வீர்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் ஒத்துழைப்பார்கள். சூழ்ச்சி களை முறியடிப்பீர்கள். எதிர்பாராத உதவிகள் கிட்டும் நாள்.

**தனுசு**
சவால்கள் விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். நண்பர்களால் ஆதாயம் பெருகும். வியாபாரத்தில் புது யுக்திகளை கையாளுவீர்கள். உங்கள் உழைப்பிற்கு பாராட்டு கிடைக்கும்.

**மகரம்**
இங்கிதமாகப் பேசி கடினமான காரியங்களையும் சாதிப்பீர்கள். உறவினர் நண்பர்களால் நன்மை உண்டு. உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவுகிட்டும். புதிய பாதை தெரியும் நாள்.

**கும்பம்**
ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் உங்களை அறியாமலேயே தாழ்வுமனப்பான்மை தலைதூக்கும். சக ஊழியர்களால் மறைமுக தொந்தரவுகள் வந்து நீங்கும். சகிப்பு தன்மை தேவை.

**மீனம்**
கணவன் மனைவி இருவரும் ஒற்றுமையுடன் அனுசரித்துப்போவது நல்லது. வியாபாரத்தில் வேலையாட்களால் பிரச்னைகள் வரும். விவாதம் வேண்டாம். எதிலும் கவனம் தேவைப்படும் நாள்.

# தமிழக வரலாற்றில் அதிக மழை; 4 மாவட்டங்களில் பெருவெள்ளம்



தூத்துக்குடி, டிசெ. 19

தமிழக வரலாற்றில் சமவெளிப் பகுதிகளில் அதிக கனமழை நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பதிவாகியுள்ளது. இதனால், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மற்றும் தென்காசி மாவட்டங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

தூத்துக்குடி மாவட்டத்தில் மட்டும் 14 இடங்களில் அதி கனமழை பதிவாகியுள்ளது. அதிகபட்சமாக காயல்பட்டினத்தில் 932 மி.மீ. மழை பதிவாகியுள்ளது. திருசெந்தூரில் 679 மி. மீ., சிறீ வைகுண்டத்தில் 618 மி.மீ. மழை பதிவாகியுள்ளது.

காயல்பட்டினத்தில் ஓராண்டில் பெய்ய வேண்டிய மழை, ஒரே நாளில் பெய்துள்ளது. தமிழக வரலாற்றில் சமவெளிப் பகுதிகளில் பெய்த அதிகபட்ச கனமழை இது என்று தெரிவிக்கப்பட்டது.

ஒட்டுமொத்த தமிழக வரலாற்றில் நீலகிரி மாவட்டம் கக்காச்சி என்ற பகுதியில் 1992ஆம் ஆண்டில் 24 மணி நேரத்தில் 965 மி.மீ. மழை பதிவானது குறிப்பிடத்தக்கது.

# சிதம்பரம் நடராஜர் கோவிலில் ஆருத்ரா திருவிழா ஆரம்பம்!



சிதம்பரம், டிசெ. 19

கடலூர் மாவட்டம், சிதம்பரம் நடராஜர் கோயிலில் சிவகாமசுந்தரி சமேத நடராஜமூர்த்தியின் மார்கழி ஆருத்ரா தரிசன உற்சவம் நேற்று திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் தொடங்கியது. டிசெ. 26-ஆம் திகதி தேர் திருவிழாவும், டிசெ. 27-ஆம் திகதி மார்கழி ஆருத்ரா தரிசனமும் நடைபெறுகிறது.

உலகப் புகழ்பெற்ற சிதம்பரம் நடராஜர் கோயிலில் ஆண்டுதோறும் மார்கழி மாதம் ஆருத்ரா தரிசனமும், ஆனித் திருமஞ்சன தரிசனமும் தொன்றுதொட்டு நடைபெற்று வருகிறது.

இதன்படி, நிகழாண்டுக்கான மார்கழி ஆருத்ரா தரிசன உற்சவம் திங்கட்கிழமை காலை 6.15 மணிக்கு மேல் 7.15 மணிக்குள் கொடியேற்றத்துடன் தொடங்கியது. திரளான பக்தர்கள் பங்கேற்று தரிசித்தனர்.

சிவகாமசுந்தரி சமேத நடராஜ பெருமான் வீற்றுள்ள சித்சபை எதிரே உள்ள கொடிமரத்தில் உற்சவ ஆச்சாரியார் ஏ. மீனாட்சிநாத தீட்சிதர் பொசுக்கொடியை ஏற்றி கொடியேற்றி வைத்தார். பின்னர் மகா தீபாராதனை நடைபெற்றது. ஆயிரக்கணக்கான பக்தர்கள் பங்கேற்று தரிசித்தனர். உற்சவத்தை தொடர்ந்து 10 நாள்களும் பஞ்சமூர்த்திகள் வீதி உலா நடைபெறும்.

எதிர்வரும் 26ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும், இரவு 8 மணிக்கு ஆயிரங்கால் முன் முகப்பு மண்டபத்தில் ஏககால இலட்சார்ச்சனை நடைபெறுகிறது. டிசெ.27 -ஆம் திகதி புதன்கிழமை அதிகாலை சூரிய உதயத்திற்கு முன்பு காலை 4 மணி முதல் 6 மணி வரை சிவகாமசுந்தரி சமேத நடராஜமூர்த்திக்கு மகாபிஷேகம் நடைபெறுகிறது. பின்னர் காலை 10 மணிக்கு சிற்சபையில் இரகசியபூஜையும், பஞ்சமூர்த்தி வீதிஉலா வந்த பின்னர் பிற்பகல் 3 மணிக்கு மேல் ஆருத்ரா தரிசனமும், ஞானகாச சிற்சபா பிரவேசமும் நடைபெறுகிறது. டிசெ. 28-ஆம்திகதி வியாழக்கிழமை பஞ்சமூர்த்தி முத்துப்பல்லக்கு வீதி உலாவுடன் உற்சவம் முடிவடைகிறது.

(ஐ)

# இந்தியா கூட்டணிக்கே வெற்றி தமிழக காங்கிரஸ் தெரிவிப்பு!

திருநெல்வேலி, டிசெ. 19

வரும் மக்களவைத் தேர்தலில் இந்தியா கூட்டணி நிச்சயம் வெற்றி பெறும் என்று தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் கே. எஸ். அழகிரி கூறினார்.

திருநெல்வேலியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர்,

சென்னையில் மிக்ஜாம் புயலால் கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. தற்போது நிவாரணப் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன. எண்ணூரில் எண்ணெய் கழிவு கடலின் முகத்துவாரப் பகுதிகளில் கலந்ததற்கு, மத்திய அரசின் எண்ணெய் நிறுவன கவனக்குறைவே காரணம். இது தொடர்பாக சுற்றுச்சூழல் துறை முழுமையான விசாரணை நடத்த வேண்டும்.

அண்மையில் நடைபெற்ற 5 மாநில சட்டப்பேரவைத் தேர்தலில் காங்கிரஸ் கட்சியின் வாக்குகள் சதவீத அடிப்படையில் அதிகரித்துள்ளன. தேர்தலில் தோற்றாலும், இந்தியா கூட்டணி கொள்கை பிடிப்புடன் செயல்பட்டு வருகிறது. வரும் மக்களவைத் தேர்தலில் இந்தியா கூட்டணி பெரும்பான்மையுடன் நிச்சயம் வெற்றிபெறும்.

பாராளுமன்றத்தில் சிலர் அத்துமீறி நுழைந்த விவகாரத்தில், உள்துறை அமைச்சகம் இதுவரை உண்மையான தகவல்களை தெரிவிக்கவில்லை. மேலும், இந்த விவகாரம் குறித்து விளக்கம் அளிக்க பிரதமர் அச்சப்படுகிறார். இந்தியாவில் வேலையில்லா திண்டாட்டத்தைப் போக்க 2 கோடி பேருக்கு வேலை கொடுப்பதாக பிரதமர் நரேந்திர மோடி கூறினார். ஆனால், வேலைவாய்ப்பின்றி இளைஞர்கள் திண்டாடி வருகின்றனர் - என்றார்.

# பெருக்கெடுத்தது பறங்கியாறு; சிராட்டிக்குளம் கிராமம் துண்டிப்பு

முல்லைத்தீவு, டிசெ. 19

**பறங்கியாறு பெருக்கெடுத்திருப்பதால் வெளிப் பிரதேச தொடர்புகள் எதுவுமின்றி முல்லைத்தீவு, மாந்தை கிழக்கு பிரதேச சபைக்கு உட்பட்ட சிராட்டிக்குளம் கிராமம் பாதிப்படைந்துள்ளதுடன் வீடுகளுள் வெள்ளம் மற்றும் ஆற்று நீர் புகுந்தமையால் வீடுகளில்கூட உணவுகளை தயார் செய்ய முடியாத நிலைமை காணப்படுகிறது என்று அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.**

இந்தப் பகுதியில் வர்த்தக நிலையங்கள் இல்லாத நிலையில், 7, 8 கிலோமீற்றர் தூரமுள்ள நட்டாங்கண்டல் பிரதேசத்துக்கு சென்றே பொருட்களை கொள்வனவு செய்யவேண்டும் என்றும் தெரிவித்த மக்கள் பறங்கியாறு பெருக்கெடுத்து குடிமனைக்குள்ளாக பாய்வதால் வைத்தியசாலைக்குக்கூட செல்லமுடியாத நிலைமை காணப்படுவதாக தெரிவித்துள்ளனர்.

கால்நடைகள்கூட வெள்ளத்தினால் அடித்து செல்லப்பட்டுள்ளன என்றும் சிலவற்றை இறந்த நிலையில் மீட்டதாகவும் தெரிவித்துள்ள அவர்கள் சிறு குழந்தைகளுடன் வாழ்ந்து வரும் நிலையில் வீடுகளில் தண்ணீர் தேங்கி வீடுகளைவிட்டு வெளியேற வேண்டிய சூழலில் தாம் இருப்பதாக தெரிவித்த அவர்கள், வீடுகளும் இடிந்துவிழுந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.



சிராட்டிகுளம் கிராம அலுவலர் பிரிவில் 67 குடும்பங்களை சேர்ந்த 197 பேர் வசித்துவரு கின்றனர். இந்த நிலையில் குறித்த குடும்பங்கள் வெள்ளத் தால் வெளித்தொடர்புகள் எதுவுமின்றி நிர்க்கதியாக்கப்பட்ட்டுள்ளனர்.

இதேவேளை கடந்த 16ஆம் திகதி வரை மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவிலே அம்பாள்புரம், கரும்புள்ளியான், ஒட்டறுத்தகுளம், நட்டாங்கண்டல், பாண்டியன்குளம், செல்வபுரம், பாலிநகர், சிராட்டிகுளம், சிவபுரம், மூன்றுமுறிப்பு, பூவரசங்குளம், விநாயகபுரம் பகுதிகள் பாதிக்கப்பட்டுள்ளன. (ஐ)

# 800 ரூபாய் கடனால் ஏற்பட்ட மோதலில் ஒருவர் மரணம்!

## ஊரெழுவில் பயங்கரம்

யாழ்ப்பாணம், டிசெ. 19

கடனாக வாங்கிய 800 ரூபாய் பணத்தைத் திருப்பி கொடுக்கவில்லை என கடன் கொடுத்தவர் தாக்கியதில் கடன் வாங்கியவர் உயிரிழந்தார்.

யாழ்ப்பாணம் ஊரெழு பகுதியை சேர்ந்த இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்து சாரதியான சிங்காரத்தினம் சிவாஸ் (வயது 40) குமார் என்பவரே இச் சம்பவத்தில் உயிரிழந்தார்.

இந்த சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

ஊரெழு பகுதியை சேர்ந்த இளைஞனிடம் 800 ரூபாய் பணத்தை கடனாக பெற்றுள்ளார். அந்த பணத்தை திருப்பிக் கொடுக்காததால் கடந்த 10ஆம் திகதி கடன் கொடுத்த இளைஞன், கடன் வாங்கியவருடன் முரண்பட்டு, தாக்குதல் நடத்தியுள்ளார்.

தாக்குதலின் பின்னர் அவரை அவரது வீட்டுக்கு அழைத்து சென்று வீட்டாரிடம் ஒப்படைத்து விட்டு, இளைஞன் சென்றுள்ளார்.

மறுநாள் தாக்குதலுக்கு இலக்கானவரின் உடல்நிலை மோசமான நிலையில், வீட்டார் அவரை யாழ். போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்துள்ளனர். அங்கு, சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்றுமுன்தினம் உயிரிழந்தார்.

உயிரிழந்த நபரை தாக்கியவர் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார்.




# ‘மலையகம் 200’ கண்காட்சி கிளிநொச்சியில் திறப்பு!

கிளிநொச்சி, டிசெ. 19

இந்தியாவிலிருந்து இலங்கை வந்த மக்களின் 200 ஆண்டு நிறைவை ஒட்டி கிளிநொச்சியில் கண்காட்சி ஒன்று நேற்று திறந்து வைக்கப்பட்டது.

கண்டி சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் சிறகுகள் பண்பாட்டு மன்றம், உண்மை மற்றும் நல்லிணக்க மன்றம், கிராமிய ஒத்துழைப்பு மன்றங்கள் இணைந்து மலையாக மக்களின் 200 ஆவது வரலாற்று நினைவு கூறும் வகையில் கண்காட்சியை ஏற்பாடு செய்திருந்தது.

இந்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் பிரதி திட்டமிட பணிப்பாளர், கரைச்சி பிதேச செயலகத்தின் திட்டமிட பணிப்பாளர், எழுத்தாளர்கள், கண்டி சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் தலைவர் மற்றும் பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர். (ஐ)

# கத்திரிக்காய்கள் திருட்டு; சந்தேகத்தில் ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், டிசெ. 19

கத்தரிக்காய் திருடிய குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கோப்பாய் மத்தி பகுதியில் உள்ள கத்தரித் தோட்டம் ஒன்றில் கடந்த 07ஆம் திகதி இரவு கத்தரிக்காய்கள் திருடப்பட்டிருந்தது. மறுநாள் தோட்ட உரிமையாளர் தோட்டத்துக்கு சென்ற வேளையில் இதனை அவதானித்த உரிமையாளர் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார்.

பொலிஸாரின் விசாரணையில் திருநெல்வேலியை சேர்ந்த 20 வயது இளைஞரை கைது செய்துள்ளனர். (ஐ)

# இரவு விடுதியின்மீது துப்பாக்கி பிரயோகம்

கொழும்பு, டிசெ. 19

கிரிபத்கொடையில் இரவு விடுதியின் மீது நேற்று அதிகாலை துப்பாக்கி பிரயோகம் இடம்பெற்றுள்ளது.

குறித்த விடுதிக்குள் வந்த நபர் ஒருவர் மதுபோதையில் காணப்பட்டார். அவர், பலமுறை துப்பாக்கிப் பிரயோகம் செய்தார். எனினும், எவருக்கும் எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை.

துப்பாக்கி பிரயோகத்தை மேற்கொண்ட நபர் காரில் தப்பிச் சென்றார் என்று தெரிவிக்கப்படுகிறது. சம்பவம் தொடர்பில் கிரிபத்கொடை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# அமெரிக்கா பறந்தார் பஸில் ராஜபக்ஷ!

கொழும்பு, டிசெ. 19

பொதுஜன பெரமுன அமைப்பின் நிறுவுநரான பஸில் ராஜபக்ஷ திடீரென அமெரிக்கா சென்றுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி அவர் துபாய் வழியாக அமெரிக்காவில் உள்ள லொஸ் ஏஞ்சல்ஸ் நகருக்கு புறப்பட்டு சென்றுள்ளதாக தெரியவந்துள்ளது.

அண்மையில், நடைபெற்ற பொதுஜன பெரமுன மாநாட்டில் அவர் தேசிய அமைப்பாளர் பதவியை விட்டு விலக தீர்மானித்ததையடுத்து அந்த பதவியை வெற்றிடமாக வைக்க



கட்சி தீர்மானித்திருந்தது.

சுமார் ஒன்றரை மாதங்கள் பஸில் ராஜபக்ஷ அமெரிக்காவில் தங்கியிருப்பார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஐ)

# 12 ஆண்டுகளுக்கு நாட்டை ரணிலிடம் ஒப்படையுங்கள்

## வஜிர அபேவர்த்தன கூறுகிறார்

கொழும்பு, டிசெ. 19

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு இன்னும் 12 வருடங்களுக்கு நாட்டை ஆட்சி செய்வதற்கான ஆணையை மக்கள் வழங்க வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

2024இல் இருந்து இன்னும் 12 ஆண்டுகளுக்கு ரணில் விக்கிரமசிங்க தேசத்தை நடத்த அனுமதித்தால், இலங்கை ஒரு சக்தி வாய்ந்த நாடாக மாறும். இல்லை என்றால், தேசம் மீண்டும் அழிவுடன் முடிவடையும்,” என்றும் அவர் கூறினார்.

# 14 இந்திய மீனவர்கள் காரைநகரில் கைது!

யாழ்ப்பாணம், டிசெ. 19

அத்துமீறி உள் நுழைந்து மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட 14 இந்திய மீனவர்கள் நேற்று ஞாயிற்றுக்கிழமை காரைநகர் - கோவளம் கடற்பரப்பில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கை கடற்படையினரால் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. அத்துடன், அவர்கள் வந்த படகும் பறிமுதல் செய்யப்பட்டது.

விசாரணைகளின் பின்னர் அவர்கள் இன்றையதினம் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளனர். (ஐ)

# 13 எம். பிக்கள் ஒரே கூட்டணியில் ரணில் விக்கிரமசிங்க அச்சத்தில்!

## டிலான் பெரேரா எம். பி. கூறுகிறார்

கொழும்பு, டிசெ. 19

**சுதந்திர மக்கள் காங்கிரஸ் கட்சியின் 13 பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒரே கூட்டணியில் இணைந்துள்ளமை குறித்து ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அச்சமடைந்துள்ளதாக அந்தக் கட்சியின் நிறைவேற்றுக்குழுவின் உறுப்பினரும் பாராளுமன்ற உறுப்பினருமான டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.**

கொழும்பு நாவல பிரதேசத்தில் அமைந்துள்ள கட்சியின் தலைமை பணிமனையில் நேற்று செய்தியாளர்களை சந்தித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கட்சியின் 13 பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒரே கூட்டணியில் இணைந்ததன் காரணமாக அச்சமடைந்துள்ள ஜனாதிபதி கட்சியை பிளவுப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

சுதந்திர மக்கள் காங்கிரஸூக்குள் கருத்து முரண்பாடுகள் இருந்தாலும் ரணில் - ராஜபக்ஷ அரசாங்கத்தை விரட்டியடிக்க எதிர்க்கட்சி சக்திகளுடன் கூட்டணி அமைப்பதை தாமதிக்கக் கூடாது.

அடுத்து ஆட்சிக்கு வரும் அரசாங்கத்தில் பிரதமர் பதவியை பெற வேண்டும் என்று கனவு காணும் இரண்டு, மூன்று பேர் சுதந்திர மக்கள் காங்கிரஸிலும் இருக்கக்கூடும் எனவும் டிலான் பெரேரா குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# குவைத் ஆட்சியாளர் மறைவு ரவூப் ஹக்கீம் அனுதாபம்!

கொழும்பு, டிசெ. 19

குவைத் அரசின் ஆட்சியாளர் (அமீர் ) ஷெய்க் நவாப் அல் அஹ்மத் அல் ஜாபிரின் மறைவையிட்டு கொழும்பில் உள்ள அந்த நாட்டுத் தூதரகத்தில் வைக்கப்பட்டுள்ள அனுதாப குறிப்பேட்டில் சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் நேற்று திங்கட்கிழமை தனது அனுதாபங்களை பதிவு செய்தார்.

இலங்கைக்கான குவைத் நாட்டின் பொறுப்பதிகாரி உஸ்மான் அல் உமருடனும் அவர் அனுதாபத்தைப் பகிர்ந்து கொண்டார். (ஐ)




# நீர்த்தேக்கங்களின் கொள்ளளவு 80 சதவீதத்தை எட்டியுள்ளது!

கொழும்பு, டிசெ. 19

அதிக மழை வீழ்ச்சியால் நீர்த்தேக்கங்களில் மொத்த நீர் கொள்ளளவு 80 சதவீதத்தை எட்டியுள்ளது என்று நீர்ப்பாசன (நீரியல்) பணிப்பாளர் பொறியிலாளர் எஸ். பி. சி. சுகீஸ்வர பண்டார தெரிவித்துள்ளார்.

நீர்ப்பாசன திணைக்களத்தால் பராமரிக்கப்படும் கிட்டத்தட்ட 40 நீர்த்தேக்கங்கள் வடியத் தொடங்கியுள்ளன. ஏனைய நீர்த்தேக்கங்களுடன் ஒப்பிடும் போது இராஜாங்கனை நீர்த்தேக்கம் கணிசமான அளவு நீர் கொள்ளளவை கொண்டுள்ளது என்றார்.

மகாவலி நீர்த்தேக்கத்தின் நீர் கொள்ளளவு 90 வீதத்தை எட்டியுள்ளதோடு நீர் மின் தேக்கங்கள் 90 வீதத்தை எட்டியுள்ளதாக பண்டார தெரிவித்தார்.

மௌஸ்ஸாகெல்ல மற்றும் காசல்ரி நீர்த்தேக்கங்களின் நீர் கொள்ளளவு 100 வீதத்தை எட்டியுள்ள அதேவேளை சமனலவெவ நீர்த்தேக்கம் அதன் நீர் கொள்ளளவின் 97 வீதத்தை எட்டியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

# உற்பத்தியாளர்கள், நுகர்வோர் வரி அதிகரிப்பால் பாதிப்பு!

## ஹர்ஷ டி சில்வா சுட்டிக்காட்டு

கொழும்பு, டிசெ. 19

வரவு - செலவு திட்டத்தின் மூலம் வரி அதிகரிப்பால் உற்பத்தியாளர்கள் மற்றும் நுகர்வோர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் வரவு - செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டதால் தாங்கள் வெற்றி பெற்றோம் என்ற எண்ணத்தில் அரசாங்கம் இருந்தால் அது தவறு என அவர் வலியுறுத்தினார்.

முன்னைய தலைவர்கள் வரிகளை குறைப்பதற்கு மோசமான தீர்மானத்தை எடுத்ததன் காரணமாகவே இன்று இலங்கை இவ்வாறானதொரு நிலையை அனுபவித்து வருகிறது. அவ்வாறு செய்வது நடைமுறை சாத்தியமற்றது எனவும் தெரிவித்துள்ளார். (ஐ)

# யானை தாக்கி பெண் மரணம்

கொழும்பு, டிசெ. 19

காட்டு யானை தாக்கியதில் பெண் ஒருவர் உயிரிழந்தார்.

பொலநறுவை - அரலகங்வில பிரதேசத்திலேயே இந்த சம்பவம் இடம்பெற்றள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காட்டு யானையின் தாக்குதலில் உயிரிழந்த பெண்ணின் சடலம் அவரது வீட்டின் பின்புறத்திலிருந்து மீட்கப்பட்டுள்ளது.

இதேவேளை, உயிரிழந்த பெண்ணின் உடலின் சில பகுதிகள் வேறு மிருகங்களால் கடிக்கப்பட்டுள்ளதாக அந்த பிரதேச வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர். (ஐ)

# காரியவசம் எம். பிக்கு எதிராக புண்ணாக்குடன் போராட்டம்!

கொழும்பு, டிசெ. 19

பெரமுனவின் சாகர காரியவசம் எம். பிக்கு எதிராக மக்கள் போராட்ட இயக்கத்தினர் புண்ணாக்குடன் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மக்கள் போராட்ட இயக்கத்தின் தலைவர் சானக பண்டார உள்ளிட்ட குழுவினர் நேற்று நெலும் மாவத்தையில் உள்ள சிறீ லங்கா பொதுஜன பெரமுன பணிமனை வளாகத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசத்துக்கு எதிராக இவ்வாறு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

அண்மையில், இடம்பெற்ற பொதுஜன பெரமுனவின் மாநாட்டில் சாகர காரியவசம் வெளியிட்ட கருத்துக்கு எதிராக இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

எனினும், குறித்த குழுவினர் பணிமனைக்குள் பிரவேசிப்பதற்கு பாதுகாப்பு பிரிவினர் சந்தர்ப்பம் வழங்காத நிலையில் வீதியிலே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டக்காரர்கள் புண்ணாக்கு வாளியை கொண்டு வந்தனர். அதனை வீதியில் வைத்து தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளனர். (ஐ)

# இந்து மயானத்தை புனரமைக்க தென்மராட்சி மக்கள் கோரிக்கை

தென்மராட்சி, டிசெ. 19

சாவகச்சேரி பிரதேச சபைக்கு உட்பட்ட பிண முருங்கை இந்து மயானத்தை சீரமைத்து தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தென்மராட்சி தெற்கு பிரதேசத்தின் நாவற்குழி கிழக்கு, கோவிலாக்கண்டி மற்றும் தச்சன் தோப்பு ஆகிய மூன்று பிரதேசங்களையும் சேர்ந்த மக்கள் குறித்த மயானத்தையே பயன்படுத்தி வருகின்றனர்.

இந்நிலையில் குறித்த மயானம் நீண்ட காலமாக புனரமைக்கப்படாமல் காணப்படுகின்றது.

“மயானத்துக்கு செல்லும் வீதி மற்றும் ஏரி கொட்டகைகள் என்பன சேதமடைந்து காணப்படுவதால் பெரும் சிரமங்களுக்கு எதிர்நோக்கின்றோம். சுமார் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் இந்த மயானத்தையே பயன்படுத்தி வருகின்றனர். எனவே, குறித்த மயானத்தை விரைவில் புனரமைத்து தரவேண்டும்” என பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ)



# வெள்ளத்தில் மூழ்கிய திருகோணமலை!

திருமலை, டிசெ. 19

திருகோணமலை மாவட்டத்தில் இன்று காலையிலிருந்து பெய்துவரும் கனமழை காரணமாக நகரின் பல பகுதிகள் வெள்ள நீரில் மூழ்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக திருகோணமலை நகரின் மட்கோ, பள்ளத்தோட்டம், உப்புவெளி, 3ஆம் கட்டை, அலஸ்தோட்டம், துவரங்காடு, கன்னியா ஆகிய பகுதிகள் வெள்ள நீரினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் திருகோணாமலை - கண்டி பிரதான வீதியிலும் வெள்ள நீர் சடுதியாக அதிகரித்துள்ளதால் அவ் வீதியினூடாக போக்குவரத்தினை மேற்கொள்ளும் மக்கள் பாரிய அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# 11 மாவட்டங்களுக்கு எச்சரிக்கை!

கொழும்பு, டிசெ. 19

நுவரெலியா, பதுளை உட்பட 11 மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்டுள்ள மண்சரிவு அபாய எச்சரிக்கை நீடிக்கப்பட்டுள்ளது.

பதுளை, காலி, அம்பாந்தோட்டை, களுத்துறை, கண்டி, கேகாலை, குருணாகல், இரத்தினபுரி, மாத்தளை மற்றும் மாத்தறை மாவட்டங்களில் உள்ள பல பிரதேச செயலக பிரிவுகளுக்கே இவ்வாறு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (அ)

# 24 மணி நேரத்தில் மட்டும் 2,121 சந்தேகநபர்கள் கைது

## பெருமளவு போதைப் பொருட்கள் கைப்பற்றல்

**கொழும்பு, டிசெ. 19**

**நாடளாவிய ரீதியில் பொலிஸாரால் நேற்று காலை நிறைவடைந்த 24 மணிநேரத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பில் பல்வேறு குற்றச்சாட்டுகளில் 2 ஆயிரத்து 121 குற்ற சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.**

பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவு மற்றும் விசேட பணியகத்தின் பதிவு செய்யப்பட்ட சந்தேக நபர்கள் பட்டியலில் இருந்த 116 சந்தேக நபர்களும் இதன்போது கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த விடயம் தொடர்பில் 12 சந்தேகநபர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்று விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும், 5 சந்தேகநபர்கள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 133 பேர் புனர்வாழ்வுக்காக பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது ஹெரோயின் 2 கிலோ 232 கிராம், 769 கிராம் ஐஸ் போதைப்பொருள், 178 கிலோ 916 கிராம் கஞ்சா, 30,550 கஞ்சா செடிகள், குஷ் போதைப்பொருள் 35 கிலோ 89 கிராம் , மாவா 626 கிராம் , தூள் போதைப்பொருள் 102 கிராம் , 3,489 போதை மாத்திரைகள் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. ஐ)

# தேசிய அமைப்பாளராக தம்மிகவை நியமியுங்கள்

## பெரமுன எம். பிக்கள் வலியுறுத்து

கொழும்பு, டிசெ. 19

பிரபல வர்த்தகரும் பாராளுமன்ற உறுப்பினருமான தம்மிக பெரேராவை சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளராக நியமிக்குமாறு அந்தக் கட்சியின் உறுப்பினர்கள் சிலர் வலியுறுத்தியுள்ளனர் என்று தகவல்கள் வெளிவந்துள்ளன.

பஸில் ராஜபக்ஷவுக்குப் பின்னர் தற்போது வெற்றிடமாகியுள்ள பதவிக்கு தம்மிக பெரேரா பொருத்தமானவர் எனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் புதிய அரசமைப்பின் படி, அதன் அனைத்து நிர்வாக உறுப்பினர்களும் புதிதாக நியமிக்கப்பட வேண்டியுள்ளனர். இந்நிலையிலேயே தம்மிக பெரேராவை தேசிய அமைப்பாளராக நியமிக்குமாறு இந்தக் குழுவினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதேவேளை, வெற்றிடமாகவுள்ள தேசிய அமைப்பாளர் பதவிக்கு கட்சியின் அடுத்த ஜனாதிபதி வேட்பாளரை நியமிக்க சிறீ லங்கா பொதுஜன பெரமுன தீர்மானித்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ஐ)

# மக்களின் ஒழுக்கமின்மையாலேயே பொருளாதாரம் வீழ்ச்சியை சந்தித்தது

## அமைச்சர் ஹறின் பெர்னாண்டோ



கொழும்பு, டிசெ. 19

நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்கு ஒழுக்கமின்மையே பிரதான காரணம் என அமைச்சர் ஹறின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

நம்மில் பெரும்பாலானோருக்கு இது கடினமான காலகட்டம், வற் வரி அதிகரிப்பு மற்றும் பிற குறைபாடுகள் குறித்து புகார் கூறுகின்றனர். நாட்டுக்கு அமைப்பு மாற்றம் தேவையில்லை, மக்களின் சித்தாந்தங்களிலேயே மாற்றம் தேவை.

ஒழுக்கமின்மையே இவ்வாறான வீழ்ச்சிக்கு மிகப்பெரிய காரணம் என தெரிவித்த அமைச்சர், மக்கள் தங்களை சீடர்களாக கொள்ள வேண்டும் - என்றும் கூறினார். (ஐ)

# விசாரணையை எதிர்கொள்பவருக்கு பதில் பொலிஸ் மா அதிபர் பதவியா?

## சட்டத்தரணிகள் கூட்டமைப்பு கவலை

கொழும்பு, டிசெ. 19

பல குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் விசாரணைகளை எதிர்கொண்டுள்ள மூத்த பிரதி பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை பதில் பொலிஸ்மா அதிபராக நியமித்தமை குறித்து சட்டத்தரணிகள் கூட்டமைப்பு கவலை வெளியிட்டுள்ளது.

முன்னாள் இராணுவ சிப்பாயை சித்திரவதை செய்த குற்றச்சாட்டு உட்பட பல குற்றச்சாட்டுகளை எதிர்கொண்டுள்ள ஒருவரின் நியமனத்துக்கு அரசமைப்பு பேரவை அங்கீகாரத்தை எப்படி வழங்கலாம் என சட்டத்தரணிகள் கூட்டமைப்பின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி உபுல்ஜெயசூரிய கேள்வி எழுப்பியுள்ளார்.

பதில் பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட்டவேளை தேசபந்து தென்னக்கோன் பல குற்றச்சாட்டுகளையும் நீதிமன்ற நடவடிக்கைகளையும் எதிர்கொண்டிருந்தார். இதனால் அவர் மீது மக்கள் நம்பிக்கையை இழந்துவிட்டனர் என்றும் உபுல் ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

தேசபந்து தென்னக்கோனும் ஏனைய சிலரும் பல வருடங்களுக்கு முன்னர், ஒருவரை சித்திரவதை செய்தமை உறுதியாகியுள்ளதால் அவருக்கு எதிராக குற்றச்சாட்டுகளை சுமத்தவேண்டியது சட்டமா அதிபரின் கடமை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

என்ன அடிப்படையில் ஜனாதிபதி இந்த நியமனத்தை மேற்கொண்டார்?, அரசமைப்பு பேரவை இதற்கு எப்படி அனுமதி வழங்கியது என பேராசிரியர் சாவித்திரி குணசேகர கேள்வி எழுப்பியுள்ளார்.

ஜனாதிபதியும் அரசமைப்பு பேரவையும் மக்களின் நம்பிக்கையை நிறைவேற்றவேண்டும் எனவும் சட்டத்தரணிகள் கூட்டமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது. (அ)

# மில்கோ நிறுவன தலைவர் விலகல்!

கொழும்பு, டிசெ. 19

மில்கோ நிறுவனத்தின் தலைவர் ரேணுகா பெரேரா தனது பதவியை இராஜிநாமா செய்துள்ளார்.

நேற்று திங்கட்கிழமை நிதி அமைச்சின் செயலாளருக்கு எழுதியுள்ள கடிதத்தில் இதனை குறிப்பிட்டுள்ளார்.

ஜனவரி 21, 2022 முதல் ரேணுக பெரேரா மில்கோவின் தலைவராக பணியாற்றி வருகிறார்.

தனது சேவைக் காலம் இன்னும் ஒரு மாதமே உள்ள போதிலும் நிறுவனத்தை மேலும் முன்னேற்றுவதற்கு தனது நேரத்தை செலவிடுவது பயனளிக்காத காரணத்தினால் பதவி விலகத் தீர்மானித்துள்ளார் என்று அந்தக் கடிதத்தில் அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

# பயணியுடனான சண்டையில் காதை கடித்து விழுங்கிய நடத்துநர்!

கொழும்பு, டிசெ 19

கொழும்பிலிருந்து அவிசாவளை நோக்கி சென்றுகொண்டிருந்த தனியார் பேருந்து நடத்துநர் ஒருவருக்கும் பயணி ஒருவருக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் நடத்துநர் பயணியின் காதை கடித்து விழுங்கினார் என்று கூறப்படுகிறது.

நேற்று முன்தினம் நடந்த இந்தச் சம்பவத்தில் பஸ்ஸின் நடத்துநர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் கல்கமுவை பிரதேசத்தை சேர்ந்த 25 வயதுடைய பஸ் நடத்துநராவார்.

சம்பவத்தின் போது பஸ் நடத்துநர் பயணிகளிடம் பணத்தைப் பெற்ற நிலையில் சன நெரிசல் அதிகரித்ததால் அதே பஸ்ஸில் பயணித்த ஒரு பயணியிடம் பஸ்ஸின் பின்புறம் செல்லுமாறு கூறியுள்ளார்.

பஸ் நடத்துநர் பல முறை கூறியும் அவர் பின்புறம் செல்லாததால் இருவருக்குமிடையில் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது.

வாக்குவாதம் எல்லை மீறியதில் பஸ் நடத்துநர் பயணியை தாக்கிவிட்டு அவரின் வலது காதை கடித்து விழுங்கி காயப்படுத்தியுள்ளார்.

காயமடைந்தவர் தனது காதில் ஒரு பகுதி இல்லை என்பதை அறிந்ததும் மீகொடை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார். (ஐ)

# துப்பாக்கியை புதைத்து வைத்திருந்த நபர் கைது

கொழும்பு, டிசெ. 19

தோட்டம் ஒன்றில் துப்பாக்கியை புதைத்து வைத்த சந்தேகநபரை காலி - மீட்டியாகொடை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மீட்டியாகொடை பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் நேற்று முன்தினம் சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

இதேவேளை, சந்தேகநபரிடமிருந்து ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் பெறுமதியான போதைப்பொருளும் கைப்பற்றப்பட்டது. சந்தேகநபர், தேவைப்படும் சந்தர்ப்பங்களில் இலகுவாக எடுக்கக்கூடிய விதத்தில் துப்பாக்கியை புதைத்து வைத்திருந்தார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர் பலப்பிட்டி நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# பாகிஸ்தானிலிருந்து வெங்காயம் இறக்குமதி!

கொழும்பு, டிசெ. 19

பாகிஸ்தானில் இருந்து பெரிய வெங்காயத்தை இறக்குமதி செய்வது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

பெரிய வெங்காயத்தின் விலையை கட்டுப்படுத்தும் நோக்கில் குறித்த நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது. தற்போது சந்தையில் ஒரு கிலோ பெரிய வெங்காயம் 500 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகின்றது.

இந்தநிலையில், இந்தியாவில் பெரிய வெங்காய ஏற்றுமதிக்கு தடை விதிக்கப்பட்டுள்ளதால் பெரிய வெங்காயத்தை இறக்குமதி செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக பெரிய வெங்காய இறக்குமதியாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஐ)

# முன்னாள் பொலிஸ் அதிகாரி போதைப்பொருளுடன் கைது

மட்டக்களப்பு, டிசெ. 19

**காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பின் போது 3 கிலோ 900 கிராம் கேரளா கஞ்சா வுடன் முன்னாள் உதவி பொலிஸ் பரிசோதகர் உட்பட இருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று காத்தான்குடி பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி ஐ. பி. பி. எஸ். பி. பண்டார தெரிவித்தார்.**

நேற்று முன்தினம் ஞாயிற் றுக்கிழமை மாலை 6 மணியள வில் காத்தான்குடி புலனாய்வு பிரிவினர் வழங்கிய தகவலை யடுத்து பூநொச்சிமுனை மற்றும் முதியோர் இல்ல வீதி ஆகிய இடங்களில் மேற்கொள்ளப் பட்ட திடீர் சுற்றிவளைப்பு தேடுதலின் போதே கைது செய் யப்பட்டனர்.

கைதான நபர்கள் மட்டக் களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளனர். காத் தான்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)



## திருவெம்பாவை விரத திருவிழா காரைதீவில் சிறப்பாக ஆரம்பம்!



காரைதீவு, டிசெ. 19

சைவ மக்கள் கடைப்பிடிக் கும் திருவெம்பாவை விரதம் நேற்று ஆரம்பமானது. கடும் மழைக்கு மத்தியிலும் அம்பா றையில் அதிகாலை முதல் திரு வெம்பாவை சிறப்பாக கடைப் பிடிக்கப்பட்டது.

காரைதீவு இந்து சமய விருத் திச்சங்கம் வருடாந்தம் நடத்தி வரும் திருவெம்பாவை திருப் பள்ளியெழுச்சி ஊர்வலம் முதல் நாளான திங்கட்கிழமை நடை பெற்றது.

முதல்நாள் ஊர்வலம் நிறை வுற்றதும் திருவெம்பாவை விசே டபூசை காரைதீவு கண்ணகை அம்மன் ஆலயத்தில் நடைபெற் றது.

ஆலய பிரதமகுரு சிவசிறீ சண்முக மகேஸ்வர குருக்களின் வழிகாட்டலில் சிவசிறீ ரூபன் குருக்கள் பூசையை நடத்தி ஆசி வழங்கினார். பின்னர் திருவாச கமுற்றோதல் நடைபெற்றது. (ஐ)

## படைப்புழு கட்டுப்பாடு தொடர்பில் விழிப்புணர்வு

மட்டக்களப்பு, டிசெ. 19

சோளன் பயிர்ச் செய்கை யில் படைப்புழு கட்டுப்பாடு தொடர்பிலான விழிப்புணர்வு செயலமர்வு மட்டக்களப்பு களு முந்தன்வெளிக் கிராமத்தில் நேற்று நடைபெற்றது.

பழுகாமம் விவசாய விரிவாக் கல் நிலையத்தின் விவசாயப் போதனாசிரியர் பி. சகாப்தன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில், அதிகாரிகளின் ஆலோ சனைகளுக்கமைய சோளன் பயிர்செய்கையில் தாக்கத்தை செலுத்தும் படைப்புழுக்களை கட்டுப்படுத்தும் செயல்பாடுகளுக்கு தாம் முயற் சிப்பதாக இதன்போது விவசா யிகள் கருத்துத் தெரிவித்தனர்.

மேலும் இந்நிகழ்வில், விவ சாயத் திணைக்களத்தின் மட்டக் களப்பு பிரதி விவசாய பணிப் பாளர் வி. பேரின்பராஜா, உதவி விவசாயப் பணிப்பதளர் எஸ். சித்திரவேல், பேராதனை விவ சாயத் திணைக்களத்தின் தலைமை பணிமனை நோய் பீடை பராமரிப்பு ஆராய்ச்சி உத்தியோகத்தர் தம்மிக சரச்சந் திர உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ஐ)

# போதைப் பொருள் ஒழிப்பு திட்டம் சாய்ந்தமருதில் விசேட நடவடிக்கை

சாய்ந்தமருது, டிசெ. 19

விசேட போதை பொருள் ஒழிப்பு திட்டத்தை அமுல்படுத் தும் வகையில் பதில் பொலிஸ் மா அதிபரின் அனைத்து மாவட் டங்களிலும் உள்ள மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்ச கர்களுக்கு பணிப்புரை விடுக் கப்பட்டுள்ளன.

இதன்படி, விசேட போதை பொருள் ஒழிப்பு குழு ஒன்றை அமைத்து அந்தக் குழுவின் ஊடாக பொதுமக்களுக்கு விழிப் பூட்டல்களை வழங்கவும் போதைப்பொருளுடன் தொடர் புடைய நபர்களை அடையா ளம் கண்டு நடவடிக்கை எடுப் பதற்குமான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பொறுப்பதி காரி எஸ். எல். சம்சுதீன் தலை மையில் நடைபெற்றது.

பொலிஸ் அத்தியட்சகர் ஜே.எச்.எம்.என் ஜயபத்ம இந் தக் கலந்துரையாடலில் கலந்து கொண்டு பல்வேறு ஆலோச னைகளை வழங்கியதுடன் போதைப்பொருள் தொடர்பில் உறுதியான தகவல்களை பொலி ஸாருக்கு வழங்குமாறு பொது மக்களிடம் கோரிக்கை விடுத் துள்ளார்.

இக்கலந்துரையாடலில் பள்ளிவாசல் நிர்வாகிகள் அரச உத்தியோகத்தர்கள் பொலிஸ் ஆலோசனைக் குழுவினர் சமூக சேவகர்கள் என பலரும் கலந்து கொண்டு தத்தமது ஆலோச னைகளை குறிப்பிட்டமை சுட்டிக்காட்டத்தக்கது. (ஐ)

# மலையகம் 200 நிகழ்வு மட்டக்களப்பில் நடந்தது

மட்டக்களப்பு, டிசெ. 19

சந்திரோதயம் கலை இலக் கிய பெரு மன்றத்தினரின் ஏற் பாட்டில் மட்டக்களப்பில் "மலையகம் 200" எனும் மலை யக மக்களின் பெருமையை பறைசாற்றும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

சந்திரோதயம் கலை இலக் கிய பெரு மன்றத்தின் தலைவர் எஸ். மணிசேகரனின் ஆலோ சனை மற்றும் வழிகாட்டல்க ளுக்கு அமைவாக கலாநிதி உ. யுவநாதன் தலைமையில் மட்டக் களப்பு பொது நூலக கேட் போர் கூடத்தின் பேராசிரியர் செ. யோகராசா அரங்கில் நடை பெற்றது.



இந்த நிகழ்வில் குறித்த நிகழ் வில் இராஜாங்க அமைச்சர் சி. சந்திரகாந்தன், பாராளுமன்ற உறுப்பினர் கோ. கருணாகரம், முன்னாள் பாராளுமன்ற உறுப் பினரும் கலை இலக்கிய சமூக அரசியல் செயல்பாட்டாளரு மான ம.திலகராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அதிதிகள் வரவேற்கப்பட்ட தனைத் தொடர்ந்து மங்கள விளக்கேற்றலுடன் மௌன இறைவணக்கம் நிகழ்த்தப்பட் டதனைத் தொடர்ந்து முன் னாள் பாராளுமன்ற உறுப்பினர் திலக்ராஜ் சிறப்பு உரையாற்றி னார். (ஐ)

## மட்டக்களப்பின் அரச அதிபராக ஜஸ்ரினா யுலேக்கா பதவியேற்றார்!

மட்டக்களப்பு, டிசெ. 19

மட்டக்களப்பு மாவட்டத் தின் புதிய அரசாங்க அதிபராக திருமதி ஜஸ்ரினா யுலேக்கா முரளிதரன் நேற்று திங்கட்கி ழமை தனது கடமைகளை மட் டக்களப்பு மாவட்ட செயலகத் தில் பொறுப்பேற்றுள்ளார்.

அவருக்கான நியமனம் கடந்த 13ஆம் திகதி பிரதமர் தினேஷ் குணவர்த்தனவால் வழங்கப்பட் டது.

யாழ்ப்பாணத்தை சேர்ந்தவ ரான ஜஸ்ரினா யுலேக்கா யாழ். திருக்குடும்ப கன்னியர் ஆங்கில பாடசாலையில் கல்வி கற்றவர். சென்னை பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானமாணி (தாவரவியல்) பட்டத்தை பெற்ற இவர், சிறீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழ கத்தில் பொது நிர்வாக முது மாணி பட்டத்தை பெற்றுள் ளார்.

திருமதி. ஜஸ்ரினா யுலேக்கா முரளிதரன், 1990ஆம் ஆண்டில் இணைந்த வட - கிழக்கு மாகாண திருகோணமலை விவசாய விரி வாக்கல் திணைக்களத்தில் பட் டதாரிப் பயிலுனராக இணைந் தார்.

2000ஆம் ஆண்டு இணைந்த வடகிழக்கு மாகாண கல்வி அமைச்சின் உதவி செயலாளரா கவும், 2007 ஆம் ஆண்டிலிருந்து கிழக்கு மாகாண காணி ஆணை யாளராகவும் பணியாற்றியவர், கடந்த 32 வருட காலமாக இலங்கை நிர்வாக சேவையில் பல்வேறு பதவிகளை வகித்தார்.

கடந்த 13ஆம் திகதி மட்டக் களப்பு மாவட்ட அரச அதிப ராக நியமிக்கப்பட்ட இவர், நேற்று தனது பதவியை ஏற்றுக் கொண்டார். சமய வழிபாடுக ளுடன் அவர் நேற்றைய தினம் கடமையை ஏற்றார். (ஐ)



## தாயாரை அழைத்து வர வீதியை கடந்த சிறுவன் விபத்தில் மரணம்

மட்டக்களப்பு, டிசெ. 19

பேருந்தில் வந்த தாயாரை அழைத்துச் செல்வதற்காக வீதியை கடந்த சிறுவன் பேருந்து மோதி உயிரிழந்தார்.

மட்டக்களப்பு - ஆறுமுகத் தான் குடியிருப்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வீதி விபத்தில் 16 வயது சிறுவன் உயிரிழந்தார். ஏறாவூர் தாமரைக் கேணியை சேர்ந்த அமீர்தீன் யாசீர் அரபாத் என்ற சிறுவனே உயிரிழந்தார்.

கல்முனைக்கு சென்ற தாயின் வருகை எதிர்பார்த்து பஸ் தரிப் பிடத்தில் காத்திருந்த சிறுவன் தாயைக் கண்டதும் பிரதான வீதியை கடக்க முற்பட்டபோது தனியார் ஆடை தொழிற்சா லைக்கு சொந்தமான பஸ் ஒன் றின் மீது மோதி சம்பவ இடத் திலேயே உயிரிழந்தார்.

பஸ்ஸின் சாரதி ஏறாவூர் பொலிஸாரால் கைது செய்யப் பட்டுள்ளார். (ஐ)

# புல்டோசர்களால் காஸா மக்களை நசுக்கி கொன்ற இஸ்ரேல் படைகள்

## சர்வதேச விசாரணை கோருகிறது பலஸ்தீனம்

காஸா, டிசெ. 19

**வடக்கு காஸாவில் உள்ள மருத்துவமனையின் நோயாளிகளை இஸ்ரேலிய படையினர் புல்டோசர்களை பயன்படுத்தி நசுக்கிக் கொலை செய்தனர் என வெளியான குற்றச்சாட்டுகள் குறித்து பலஸ்தீன அதிகார சபை விசாரணைகளை கோரியுள்ளது.**



வட காஸாவில் உள்ள கமால் அட்வான் மருத்துவமனையிலேயே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. மருத்துவமனைக்கு அருகில் இடம்பெயர்ந்த மக்கள் தங்கியிருந்த கூடாரங்களை இஸ்ரேலிய படையினர் புல்டோசர்களை பயன்படுத்தி அழித்தனர். இதன்போது நோயாளிகள் உட்பட பொது மக்களை கொலை செய்தனர் என மருத்துவர்களும் சம்பவத்தை நேரில் பார்த்தவர்களும் குறிப்பிட்டனர்.

பொதுமக்கள் வேண்டுமென்றே இலக்கு வைக்கப்பட்டனர் புல்டோசர்களை பயன்படுத்தி பொதுமக்கள் உயிருடன் புதைக்கப்பட்டனர் என தெரிவித்துள்ள ஒருவர் இதனை யார் செய்வார்கள் இந்த குற்றங்களை இழைத்தவர்கள் அனைவரையும் நீதியின் முன் நிறுத்தவேண்டும் சர்வதேச நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்லவேண்டும் என தெரிவித்துள்ளார்.

கமால் அட்வான் மருத்துவமனைக்கு அருகில் கட்டட இடிபாடுகளினுள் பலர் உயிரிழந்த நிலையில் காணப்படுவதை காண்பிக்கும் காணொலிகள் சமூக ஊடகங்களில் வெளியாகியுள்ளன.

மருத்துவமனையின் பெருமளவு பகுதியை புல்டோசர்களால் இடித்து இஸ்ரேல் படைகள் தரை மட்டமாக்கியுள்ளன என்று தெரிவித்த அல்ஜசிரா தொலைக்காட்சி செய்தியாளர் அத்துடன், புல்டோசர்களால் நசுக்கப்பட்டு 20 பொதுமக்கள் உயிரிழந்தனர் என்றும் தெரிவித்தார். (ஐ)

# 1000 பணயக் கைதிகளை பிடித்தது இஸ்ரேல் படை!



காஸா, டிசெ. 19

ஹமாஸ் அமைப்புக்கு எதிராக இஸ்ரேல் காஸாவில் கடும் போரை நடத்தி வருகின்றது. இந்த நிலையில், நேற்று முன்தினம் 1000 பணயக் கைதிகளை இஸ்ரேல் இராணுவம் பிடித்துச் சென்றதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

உலக நாடுகள் போர் நிறுத்தத்துக்கு அழுத்தம் கொடுத்த போதிலும், தாக்குதலை சிறிதும் குறைக்கவில்லை.

இந்த நிலையில், நேற்று முன்தினம் நடத்தப்பட்ட தாக்குதலில் சுமார் ஆயிரம் பணயக் கைதிகளை இஸ்ரேல் இராணுவம் பிடித்துச் சென்றுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இதேநேரம், இஸ்ரேல் காஸாவில் மிகப்பெரிய சுரங்கப்பாதையை கண்டு பிடித்துள்ளதாக அறிவித்துள்ளது.

எராஸ் எல்லைப் பகுதியில் இந்த சுரங்கப் பாதையை இஸ்ரேல் இராணுவம் கண்டுபிடித்துள்ளது. சிறிய வகை வாகனம் செல்லும் வகையில் மிகப்பெரியதாக உள்ளது எனத் தெரிய வந்துள்ளது. இந்த துரங்கப் பாதை பல கோடி ரூபாய் செலவில் பல ஆண்டுகளாக கட்டப்பட்டுள்ளது. அனைத்து வகை வசதிகளும் கொண்டதாக உள்ளது என இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

# ஜப்பானுக்கு ஆயுத உதவி அளிக்கிறது அமெரிக்கா!

ரோக்கியோ, டிசெ. 19

ஜப்பானுக்கு அதன் அயல் நாடுகளான சீனா, வடகொரியா போன்றவற்றிடம் இருந்து அவ்வப்போது அச்சுறுத்தல் ஏற்படுகிறது. இதனை சமாளிக்க நாட்டின் இராணுவ பலத்தை அதிகரிக்க ஜப்பான் அரசாங்கம் முடிவு செய்துள்ளது. இதன் ஒரு பகுதியாக அமெரிக்காவிடம் இராணுவ உதவியை கோரியது.

எனவே, ஜப்பானுக்கு இராணுவ உதவிகளை வழங்க அமெரிக்கா முன்வந்துள்ளது. இதன்படி, நம் நாட்டு மதிப்பில் சுமார் 2 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான சைட் விண்டர் ஏவுகணை உள்பட பல்வேறு நவீன ஆயுதங்களை வழங்க அமெரிக்க பாதுகாப்பு துறை ஒப்புதல் அளித்துள்ளது. (ஐ)

# ஆஸியில் பெருவெள்ளம் மக்கள் அவசர உதவி கோரல்!

## வெள்ளத்தில் வந்த முதலைகளால் அச்சம்!

சிட்னி, டிசெ. 19

அவுஸ்திரேலியாவின் வட குயின்ஸ்லாந்தில் பெரும் வெள்ளத்தில் மக்கள் சிக்கியுள்ளனர். அவர்கள் தம்மை மீட்க அவசர உதவியை கோரியுள்ளனர்.

குயின்ஸ்லாந்தின் குக்டவுன் முதல் இனிஸ்பெயில் வரை பல நகரங்கள் வெள்ளத்தால் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. பிரதான வீதிகள் அனைத்தும் துண்டிக்கப்பட்டுள்ளன.

இதேநேரம், நூற்றுக்கணக்கான மக்கள் தம்மை காக்குமாறு அவசர உதவிகளை கோரியுள்ளனர். வெள்ளத்தால் பொதுமக்கள் தங்கள் வீடுகளின் கூரையில் ஏறி இருக்கின்றனர். இந்த வெள்ளத்தால் முதலைகள் வருவதால் ஆபத்தான மற்றும் அச்ச சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. (ஐ)



# லிபிய படகு மூழ்கியதில் 61 அகதிகள் உயிரிழப்பு

திரிபோலி,டிசெ. 19

லிபியாவிலிருந்து ஐரோப்பாவுக்கு சென்ற அகதிகள் பயணித்த படகு மத்திய தரைக்கடலில் மூழ்கியதில் 61 பேர் உயிரிழந்தனர்.

உலகில் மிக ஆபத்து நிறைந்த புலம்பெயர் வழிகளில் ஒன்றாக மத்திய தரைக்கடல் பகுதி நீடித்து வருகிறது. இந்த நிலையில் லிபியாவின் ஜ்வரா நகரில் இருந்து படகு ஒன்றில் 86 பேர் அகதிகளாக புறப்பட்டனர். அவர்களுடைய படகில் பெண்கள், குழந்தைகள் என பலர் பயணித்துள்ளனர்.

இந்நிலையில், திடீரென படகு நடுக்கடலில் கவிழ்ந்தது. இதனால், படகில் இருந்த பலர் நீச்சல் தெரியாமல் தவித்தனர். சிலர் கடலில் குதித்து நீந்தி



கரைக்கு சென்றனர். எனினும், அகதிகளில் 61 பேர் நீரில் மூழ்கி விட்டனர் என லிபியாவில் உள்ள சர்வதேச அகதிகளுக்கான அமைப்பு ஒன்று தெரிவித்துள்ளது.

இத்தாலி நாட்டின் வழியே ஐரோப்பிய நாடுகளுக்கு அகதிகள் செல்வதற்கான முக்கிய புறப்படும் இடங்களாக லிபியா மற்றும் துனீசியா ஆகிய நாடுகள் உள்ளன. இந்த இரு நாடுகளில் இருந்தும் 1.53 இலட்சத்துக்கும் மேற்பட்ட அகதிகள் இத்தாலிக்கு நடப்பு ஆண்டில் வருகை தந்துள்ளனர் என ஐ.நா. அகதிகள் நிறுவனம் தெரிவித்துள்ளது. (ஐ)

# பாப்பரசரின் ஆலோசகருக்கு ஐந்தரை ஆண்டுகள் சிறை!



வத்திக்கான், டிசெ. 19

வத்திக்கான் நகரின் மூத்த அதிகாரியும் பாப்பரசர் பிரான்சிஸின் ஆலோசகராக இருந்தவருமான கர்தினால் அஞ்சலோ பெக்கியூவுக்கு நிதி குற்றச்சாட்டில் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

அஞ்சலோ பெக்கியூ தனது அதிகாரத்தை பயன்படுத்தி பல்வேறு நிதி முறைகேடுகளை செய்ததாகவும் ஊழல் செய்து சொத்து குவித்ததாகவும் குற்றச்சாட்டு எழுந்தது. இதுதொடர்பாக வத்திக்கான் சிற்றி நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை நடைபெற்றது.

கத்தோலிக்க திருச்சபைக்கு பெரும் நஷ்டத்தை ஏற்படுத்திய லண்டன் சொத்து ஒப்பந்தத்தை மையமாக வைத்து இந்த விசாரணை நடைபெற்றது.

இரண்டரை ஆண்டுகள் நீடித்த விசாரணை நிறைவடைந்த நிலையில் அஞ்சலோ பெக்கியூவுக்கு ஐந்தரை ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. நிதி மோசடி குற்றங்களுக்காக தண்டனை பெற்ற முதல் கர்தினால் இவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஐ. எம். எவ்வின் உதவி கிடைத்திராவிடின் நாடு பெரும் பாதாளத்தில் விழுந்திருக்கும்!

## நீதி அமைச்சர் விஜயதாஸ



கொழும்பு, டிசெ. 19

**நாடு ஒன்று முன்னேறுவதற்கு அடிப்படை தேவையாக இருப்பது சட்டத்தின் ஆட்சியாகும். ஆட்சியாளருக்கு ஒரு சட்டமும் சாதாரண மக்களுக்கு ஒரு சட்டம் என்றால் அந்த நாடு முன்னேறப்போவதில்லை. அத்துடன், சர்வதேச நாணய நிதியத்தின் உதவி கிடைத்தமையாலே நாடு இயல்பு நிலைக்கு மாறியது. அவ்வாறு இல்லாவிட்டால் நாடு பெரும் பாதாளத்தில் விழுவதற்கு இடமிருந்தது என நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.**

மாத்தளை மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற நீதி அமைச்சின் நடமாடும் சேவையில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

கடந்த சில ஆண்டுகளாக, நாடு என்ற வகையில் வீழ்ச்சியடைந்த யுகத்திலேயே நாம் வாழ வேண்டியிருந்தது. கோவிட் தொற்று, அரசில் நெருக்கடி காரணங்களால் மக்கள் பெரும் அழுத்தங்களுக்கு ஆளாகினர். நாடு அராஜக நிலைக்கு தள்ளப்பட்டது. இன்று கருத்து தெரிவிக்கும் எந்த அரசியல் வாதியும் இந்த நாட்டை பொறுப்பேற்க முன்வரவில்லை. எமது திறைசேரியில் டொலர் இல்லாமல் போனது. எரிபொருள் உள்ளிட்ட அனைத்து பொருட்களுக்கும் வரிசையில் நிற்கவேண்டிய நிலை ஏற்பட்டிருந்தது. இந்த அனைத்து சவால்களுக்கும் மத்தியிலேயே நாங்கள் இந்த நாட்டை பொறுப்பேற்றோம்.

நாங்கள் வீழ்ச்சியடைந்திருந்த இந்த நாட்டை கடந்த ஒன்றரை வருடங்களுக்குள் இயல்பு நிலைக்கு கொண்டு வந்தோம். நாங்கள் எதிர்பார்த்த இலக்குக்கு நாட்டை கொண்டு வந்தோம். நாடு வீழ்ச்சியுற்றிருந்த ஒன்றரை வருட காலத்தில் நாட்டின் பணவீக்கம் நூற்றுக்கு 97 வீதமாக இருந்தது. ஆளும் அரசாங்கம் பணவீக்கத்தை நூற்றுக்கு 3வீதம் அளவுக்கு கொண்டுவந்துள்ளோம். மீண்டும் ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் இருந்த நிலைக்கு செல்ல இடமளிக்க முடியாது. அது எங்கள் அனைவருக்கும் இருக்கும் பொறுப்பும் கடமையுமாகும்.

நாங்கள் சட்டத்தின் ஆட்சியை நிலைநிறுத்துவது, ஜனநாயகத்தை பாதுகாப்பது பற்றி பேசுகிறோம். நீதி அனைவருக்கும் சமம் என்று கூறப்பட்டாலும் அவ்வாறு இடம்பெறுவதில்லை. நாடு ஒன்று முன்னேறுவதற்கு அடிப்படை தேவையாக இருப்பது சட்டத்தின் ஆட்சியாகும். ஆட்சியாளருக்கு ஒரு சட்டமும் சாதாரண மக்களுக்கு ஒரு சட்டம் என்றால் நாடொன்று முன்னேறப்போவதில்லை. உலகில் வளர்ச்சியடைந்த நாடுகள் சட்டத்தின் ஆட்சியை உறுதிப்படுத்தியதன் மூலமே மாத்திரமே அந்த நிலைக்கு வந்துள்ளன.

நாங்கள் சட்டத்தின் ஆட்சியை உறுதிப்படுத்துவதற்கு சுயாதீன ஆணைக்குழுக்களை அமைத்தோம். இந்த நாட்டின் பொலிஸ் அரச சேவை சுயாதீனப்படுத்தினோம். எமது நாட்டின் முன்னேற்றத்துக்கு பிரதான தடையாக இருப்பது ஊழல் என்பதே உலக நாடுகளின் கருத்தாகும். அரச நிதி பயன்பாட்டில் அதிக மோசடி இடம்பெறுவது பெறுகை கோரல் செயற்பாட்டிலாகும். அதனை தடுப்பதற்கு பெறுகை ஆணைக்குழு அமைத்தோம். இந்த நாட்டில் ஊழல் மோசடிகள் இடம்பெறுவதை நிறுத்த வேண்டும் என ஆளும் எதிர்கட்சி அனைவரும் தெரிவித்தார்கள். என்றாலும் அது தொடர்பான சட்டத்தை கொண்டுவர யாரும் முன்வரவில்லை.

அத்துடன், நாங்கள் ஐக்கிய நாடுகள் சபையின் ஊழல் எதிர்ப்பு சட்டத்துக்கு அமைய ஊழல் எதிர்ப்பு சட்டமூலத்தை தயாரித்தோம். ஊழலுக்கு எதிராக பேசினாலும் சட்ட மூலத்தை கொண்டுவந்தபோது அது தொடர்பில் பேசிய பல அரசியல்வாதிகள் எதிர்ப்பு தெரிவித்தனர். என்றாலும் அந்த சட்டமூலத்தை அனுமதித்துக் கொண்டோம் - என்றார். (ஐ)

# மக்கள் ஆணைக்கு மாறாக மொட்டு – ஐ. தே. க. இணைவு

## ஜீ. எல். பீரிஸ் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 19

நானும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் மக்களுக்கு ஒரு தெளிவான திட்டத்தை முன்வைத்தோம். ஆனால், அவர்கள் மக்களின் ஆணைக்கு மாறாக ஐக்கிய தேசிய கட்சியுடன் கைகோத்து செயல்படுகிறார்கள். மொட்டுக் கட்சியின் கொள்கைகளை ஐக்கிய தேசிய கட்சியின் கொள்கைகளுடன் ஒருபோதும் நடைமுறைப்படுத்த முடியாது என சுதந்திர மக்கள் சபையின் பிரதிநிதியும் பாராளுமன்ற உறுப்பினருமான ஜீ. எல். பீரிஸ் தெரிவித்தார்.

கண்டிக்குச் சென்ற அவர் மல்வத்து பீடத்தின் நியங்கொட விஜிதசிறி தேரரை சந்தித்து ஆசி பெற்ற பின்னர் அவர் செய்தியாளர்களிடம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கட்சியின் தலைவராகவும் நான் கட்சியின் செயலாளராகவும் ஒரே மேடையில் இருந்து என்ன செய்தோம். மக்களுக்கு நாம் ஒரு தெளிவான திட்டத்தை முன்வைத்தோம். மக்கள் அந்த திட்டத்துக்கு அனுமதி வழங்கினர்.

இருந்த போதிலும் தற்போது அவர்கள் என்ன செய்கிறார்கள். மக்களின் ஆணைக்கு மாறாக ஐக்கிய தேசிய கட்சியுடன் கைகோத்து செயல்படுகிறார்கள். மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை மீறுகின்றனர். இந்த கரம் பிடிப்பே மொட்டுக் கட்சிக்குள் இருக்கும் பிரதான பிரச்னையாகும். இது பொருந்தாத ஒன்றாகும். மொட்டுக் கட்சியின் கொள்கைகளை ஐக்கிய தேசிய கட்சியின் கொள்கைகளுடன் ஒருபோதும் நடைமுறைப்படுத்த முடியாது - என்றார். (ஐ)

# 5 சிறுமிகள் வன்புணர்வு பாதிரியார் ஒருவர் கைது

கொழும்பு, டிசெ. 19

ஐந்து சிறுமிகளை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் 63 வயது பாதிரியார் ஒருவரை கொழும்பு - கிருலப்பனை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கிருலப்பனையில் குறிப்பிட்டவொரு மத சபையொன்றின் கீழ் நிர்வகிக்கப்பட்டு வரும் விடுதியிலேயே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது .

துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்ட 5 சிறுமிகளையும் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். 9 முதல் 17 வயதுக்கு உட்பட்ட ஐந்து சிறுமிகள் கடந்த 2020 ஆம் ஆண்டு முதல் குறித்த பாதிரியாரால் பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். அத்துடன், அந்த விடுதி பதிவு செய்யப்படாத நிலையில் உள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட பாதிரியார் தொடர்பான மேலதிக விசாரணைகளை கிருலப்பனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# போதகர் ஜெரோமுக்கு சிறை மருத்துவரிடம் சிகிச்சை

கொழும்பு, டிசெ. 19

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள போதகர் ஜெரோம் பெர்னாண்டோ சிறைச்சாலை மருத்துவரிடம் சிகிச்சை பெற்றுள்ளார்.

உடலில் ஏற்பட்ட அரிப்பு காரணமாகவே அவர் சிறைச்சாலை மருத்துவரிடம் சிகிச்சை பெற்றுள்ளார்.

பிற மதத்தினரை இழிவுப்படுத்தியமை மற்றும் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்த முயற்சித்த குற்றச்சாட்டின் பேரில் போதகர் ஜெரோம் பெர்னாண்டோ கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில், போதகர் ஜெரோம் பெர்னாண்டோ கடந்த முதலாம் திகதி குற்றப்புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# மதுபோதையில் ஓட்டோவை செலுத்திய பெண் சாரதி கைது

கொழும்பு, டிசெ. 19

கண்டி - மஹியங்கனை வீதியில் மதுபோதையில் ஓட்டோவை செலுத்தி சென்ற பெண் ஒருவர் தெல்தெனிய போக்குவரத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் கண்டி - தெல்தெனிய பிரதேசத்தை சேர்ந்த 33 வயதுடைய பெண்ணாவார்.

தெல்தெனிய ஆதார மருத்துவமனையிலிருந்து இவரின் மருத்துவ அறிக்கையை பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர் தெல்தெனிய நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளனர். (ஐ)

# காக்கைகளும் மைனாக்களும் மீள எழுச்சிபெற பிரயத்தனம்!

## சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 19

15இல் இருந்து 18 வீதமாக வற் வரியை அதிகரித்து நாட்டையே வங்குரோத்தாக்கிய ஜனாதிபதியின் எடுபிடிகளும் 7 மூளைகளை கொண்ட காக்கைகளும் மைனாக்களும் மீண்டும் எழுச்சி பெற கடும் பிரயத்தனம் எடுத்து வருகின்றன என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி, ஏனைய கட்சிகளை போல் ஊடகங்களில் வந்து கோப்புகளை காட்டி போலி அரசியல் செய்யாது. நாட்டை வங்குரோத்தடைய செய்தவர்கள் யார் என்பதை நடைமுறையில் சட்டத்தில் நீதிமன்றமும் வெளிப்படுத்தி விட்டது என்றும் அவர் கூறினார்.

பியகம பிரதேசத்தில் நடந்த மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித்



பிரேமதாஸ மேற்கண்டவாறு கூறினார்.

“நாட்டில் வறுமை 30 இலட்சத்திலிருந்து 70 இலட்சமாக அதிகரித்திருக்கும் நேரத்தில், வறிய மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கான முறையான வேலைத்திட்டம் எதுவும் அரசாங்கத்திடம் இல்லை.

தேர்தலின் போது மக்களுக்கு அதிகாரம் வழங்கப்படுவதாக கூறப்பட்டாலும், ஆட்சிக்கு வந்த பின் அரசியல்வாதிகளே தீர்மானங்களை எடுக்கின்றனர். இந்நிலையை மாற்ற வேண்டிய தருணம் வந்துள்ளது. கிராமத்திலும் நகரத்திலும் முடிவெடுக்கும் அதிகாரத்தை இளைஞர்களுக்கு வழங்குவதே ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் இலக்கு.

ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் இளைஞர்களுக்கும் பெண்களுக்கும் முடிவெடுக்கும் உரிமை வழங்கப்படும். நாட்டில் சிறுவயது முதலே கல்வியை மேம்படுத்த வேண்டும்.

பிரபஞ்சம், மூச்சுத் திட்டங்களை எதிர்க்கட்சி செயல்படுத்தியபோது அரசாங்கம் சேறுபூசும் செயற்பாடுகளை முன்னெடுத்தாலும்,ஐக்கிய மக்கள் சக்திக்கு பெறப்பட்ட ஒவ்வொரு நிதியும் வங்குரோத்து நிலையில் உள்ள நாட்டின் சுகாதாரம் மற்றும் கல்வி முறையை மேம்படுத்தவே பயன்படுத்துகிறது- என்றார். (ஐ)

## தொடர்ந்து...

போக்குவரத்து தடை ஏற்பட்டுள்ளது. மதவளசிங்கன் குளம் இரண்டு அடிவான் பாய்கிறது.

இதனால் பூதன்வயல், கணுக்கேணி கிழக்கு, முறிப்ப பகுதி மக்கள் அவதானமாக இருக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேபோன்று தண்ணி முறிப்பு குளத்தின் கீழ் பகுதியில் உள்ள மக்களும் அவதானமாக இருக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் துணுக்காய் ஆலங்குளம் கொக்காவில் வீதியில் மருதங்குளம் ஐயன்கன்குளம் வான் பாய்வதால் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. முல்லைத்தீவு மாவட்டத்தில் புளியமுனை விவசாய நிலங்களுக்கு மக்கள் செல்ல முடியாது வீதிகள் வெள்ளத்தில்மூழ்கியுள்ள நிலையில் படகு சேவை மூலம் மக்கள் விவசாய நிலங்களுக்கு சென்று வருகின்றனர். மழை தொடர்ந்து பெய்துவருகின்ற நிலையில் முல்லைத்தீவு மாவட்ட மக்கள் கடுமையான பாதிப்புக்களை சந்தித்துள்ளனர்.

மொத்தமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் *1126* குடும்பங்களை சேர்ந்த *3463* பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ பிரிவின் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## அண்டை...

சர்வதேச நிறுவனங்கள் உட்பட ஏனைய உலகம் என்ன செய்வது என விவாதிக்கொண்டிருந்தவேளை இந்தியாவே உண்மையில் இலங்கைக்கு உதவ முன்வந்தது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்தியா சாதித்துள்ள விடயங்கள் எங்களிற்கே ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளன.

இதன் மூலம் இயல்பானநன்மையை பெற்றவர்கள் யார் என்றால் எங்களை சுற்றியுள்ள நாடுகளே

உங்களிற்கு தெரியும் கடந்த சில வருடங்களாக - நாங்களே கொவிட்டினால் நெருக்கடிகளை எதிர்கொண்டோம் என்றால் எங்களின் அயல்நாடுகள் மிகச்சிறியவை,அவர்களிடம் எங்களை போல கொரோனா தடுப்பூசிகளை உற்பத்தி செய்யும் திறன் இருக்கவில்லை.

நாங்கள் முன்வந்து உதவியிருக்காவிட்டால் கொரோனா தடுப்பூசிகளை பெறும் விடயத்தில் அவர்கள் கைவிடப்பட்டிருப்பார்கள் .

இலங்கை போன்றதொரு நாடு மிக மோசமான ஆழமான பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளப்பட்டது,

உதவிசெய்யவேண்டிய உலகமும் உலக நாடுகளும் நிறுவனங்களும் என்ன செய்வது என்ற தங்களிற்குள் விவாதித்துக்கொண்டிருந்தவேளை இந்தியாவே உதவிவழங்கியது.

எங்களின் நீட்டப்பட்ட கரங்களே இலங்கையின் இருண்ட தருணத்தில் முக்கியமான அவசியமான உதவியை வழங்கியது. நாங்கள் மிக முக்கியமான மாற்றத்தை ஏற்படுத்தினோம்.

எங்கள் அயல்நாடுகளிற்கு சென்றவர்கள் ஏனைய மாற்றங்களை கட்டமைப்புமாற்றங்களை அவதானித் திருப்பீர்கள் - இடம்பெறுகின்ற ஆழமான மாற்றங்களை அவதானித்திருப்பீர்கள்,

உங்களால் இலகுவாக பயணம் செய்ய முடியும்,புகையிரதபாதைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன, அதிகளவு வீதிகள் அமைக்கப்பட்டுள்ளன - அவர்களும் எங்களை பயன்படுத்துகின்றனர்.

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி ஏனைய பிராந்தியம் முழுவதையும் உயர்த்திவிடும் வளர்ச்சிப்பாதையில் செலுத்துவதில் உதவுகின்றது.

நெருக்கடியான தருணங்களில் உங்களிற்குஇந்தியா உள்ளது என்பதை அயல்நாடுகளிற்கு நாங்கள் வெளிப்படுத்தியுள்ளோம் தடுப்பூசியாகட்டும் உணவாகட்டும் நிதி உதவியாகட்டும அத்தியாவசிய பொருட்கள் ஆகட்டும்.

இது அயல்நாடுகளுக்கு பெரும் செய்தியை சிறந்த செய்தியை சொல்கின்றது - என்றார். (அ)

## சுதந்திர...

சாட்டியுள்ளார்.

சுதந்திர மக்கள் பேரவையில் கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டாலும், ரணில் - ராஜபக்ஷ அரசாங்கத்தை பதவியில் இருந்து அகற்ற எதிர்க்கட்சிகளுடன் இணைந்து செயற்பட தாம் தயார் என்றும் டிலான் பெரேரா கூறினார். (அ)

## இலங்கை...

மாநாட்டில் கலந்துகொள்ளாமல் வெளியேறி மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தை அவமானப்படுத்தியது பிரதமர் ஹார்பர் அரசாங்கமே.

இலங்கையில் இனப்படுகொலையில் ஈடுபட்ட அரசாங்க உறுப்பினர்களுக்கு எதிராக மக்னிட்ஸ்கி தடைகளை விதிப்பதே தற்போது திட்டம். இதன் மூலம் சர்வதேச தடைகள் ஊடாக அவர்களது தனிப்பட்ட நிதிகளை முடக்கலாம்.

சர்வதேச நீதிமன்றத்தில் இலங்கை அரசாங்கத்திற்கு எதிரான சட்ட நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காக நாங்கள் கனடாவின் வெளிவிவகார அமைச்சின் சட்டத்தரணிகளை பயன்படுத்துவோம். இதன் மூலம் இலங்கை அரசாங்கத்தின் உறுப்பினர்களை இனப்படுகொலைக்காக இனம்கண்டு சட்டநடவடிக்கைகளுக்கு உட்படுத்தலாம்.

தமிழர்களிற்கு எதிராக தொடரும் இனப்படுகொலை நடவடிக்கைகளுக்காக இலங்கை அரசாங்கத்தை தொடர்ந்து கண்டிப்போம் - தனிமைப்படுத்துவோம். - என்றார். (அ)

## கில்மிஷாவுக்கு...

மலையகத்தை சேர்ந்தவரான கனகராஜ் அசானி ஆகியோரும் பங்கேற்றிருந்தனர்.

சரிகமப இசை போட்டி நிகழ்ச்சியின் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில், கில்மிஷா முதலிடத்தைப் பிடித்தார். அவருக்கு 10 இலட்சம் இந்திய ரூபாய் பணப்பரிசு அளிக்கப்பட்டது.

பட்டம் வென்ற கில்மிஷாவுக்கு பலரும் பாராட்டுகளை தெரிவித்து வருகின்றனர். இந்த நிலையில், நேற்றைய தினம் அவருக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தொலைபேசி மூலம் வாழ்த்துத் தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தமிழரசின்...

தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன் மாநாட்டுக்கான முன் ஆயத்தங்களைச் செய்வதற்கும் செயற்பாடுகளைக் கண்காணிப்பதற்கும் திருகோணமலை மாவட்டக் கிளைத் தலைவர் எஸ். குகதாசன் தலைமையில் ஒன்பது பேர் கொண்ட ஏற்பாட்டுக் குழுவும் அமைக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் அரசியல் குழுவில் உள்ள மாவை சேனாதிராஜா, எம்.ஏ.சுமந்திரன், சிவஞானம் சிறிதரன், ப.சத்தியலிங்கம், த.கலையரசன், சேவியர் குலநாயகம், சி.வி.கே.சிவஞானம் ஆகியோர் கலந்துகொண்டனர். அரசியல் குழுவில் உள்ள இரா.சம்பந்தன், கே.வி.தவராசா ஆகியோர் பங்கேற்கவில்லை. சம்பந்தன் சுகவீனம் காரணமாகவும், தவராசா சிங்கப்பூர் சென்றமையாலும் கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

கட்சியின் பொருளாளர் கனகசபாபதி மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களான சார்ள்ஸ் நிர்மலநாதன், இரா.சாணக்கியன் ஆகியோரும் நேற்றைய கூட்டத்துக்கு அழைக்கப்பட்டிருந்தனர். அவர்களில் சார்ள்ஸ் நிர்மலநாதன் எம்.பி. கலந்துகொள்ளவில்லை.

திருகோணமலை மாவட்டக் குழுவே கட்சியின் தேசிய மாநாட்டு ஏற்பாட்டுக் குழுவாகச் செயற்படுகின்றது என்பதால், எஸ்.குகதாசன் தலைமையிலான மாவட்டக் குழுவும் அழைப்புக்கிணங்க நேற்றைய அரசியல் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டது. (அ)

# நாம் பயங்கரமான இடத்தில்!

### ஒரு குடும்பம் சீவிக்க ஒரு லட்சத்து 75 ஆயிரம் தேவை

கொழும்பு, டிசெ. 19

நாடு மிகவும் ஆபத்தான நிலைமைக்கு சென்றுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ச டி சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் உள்ள எதிர்க்கட்சி தலைவரின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வருமானத்தை அதிகரிக்க அரசாங்கம் எடுத்த முடிவு காரணமாக மக்களும், சமூகமும் கடும் அழுத்தங்களுக்கு உள்ளாகியுள்ளது.

இந்த வரி வருவாயை அதிகரிக்கவில்லை என்றால்,சர்வதேச நாணய நிதியத்துடன் இணக்கத்தை ஏற்படுத்திக் கொண்டு வேலைத்திட்டம் பாதிக்கப்பட வாய்ப்புள்ளது.

தற்போது நாம் பயங்கரமான இடத்தில் இருக்கின்றோம்.நான் நாட்டு மக்களுக்கு தெளிவுப்படுத்தியது போல் தற்போது சமநிலையாக இருக்கின்றோம்.

எனினும் இந்த நிலைமையானது வரிசை யுகம் இருந்த காலத்திற்கு முன்பு இருந்தயுகத்தை விட மிகவும் மாற்றமான இடத்தில் உள்ளது.

நெருக்கடி முன்னர் வரிசைகள் ஏற்பட்ட காலத்தில் வாழ்வதற்கு 75 ஆயிரம் முதல் 80 ஆயிரம் ரூபா வரை தேவைப்பட்டது.

இன்று ஒரு குடும்பம் ஜீவிக்க ஒரு லட்சத்து 75 ஆயிரம் ரூபா தேவைப்படுகிறது என அரசாங்கத்தின் புள்ளிவிபர நிறுவனங்கள் கூறுகின்றன.

இதன் மூலம் மக்களுக்கு வாழ முடியாத நிலைமையேற்பட்டுள்ளதை காண முடிகிறது.

வரிசையில் இருந்து கூட பொருட்களை பெற்றுக்கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதனால், வரிசைகள் இல்லாமல் போய்விட்டது என்று நாம் மகிழ்ச்சியடைய முடியாது - என்றார். (அ)

# சாகரவுக்கு எதிராக போராட்டம்

கொழும்பு, டிசெ. 19

மக்கள் போராட்ட இயக்கத்தின் தலைவர் சானக பண்டார உள்ளிட்ட குழுவினர் நேற்று நெலும் மாவத்தையில் உள்ள பொதுஜன பெரமுன அலுவலக வளாகத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசத்திற்கு எதிராக இவ்வாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அண்மையில் இடம்பெற்ற பொதுஜன பெரமுனவின் மாநாட்டில் சாகர காரியவசம் வெளியிட்ட கருத்திற்கு எதிராக இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

எனினும் குறித்த குழுவினர் அலுவலகத்திற்குள் பிரவேசிப்பதற்கு பாதுகாப்பு பிரிவினர் சந்தர்ப்பம் வழங்காத நிலையில் வீதியிலே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டக்காரர்கள் புண்ணாக்கு வாளியொன்றை கொண்டுவந்துட்டுள்ளதுடன், அதனை வீதியில் வைத்து தமது எதிர்ப்பினை வெளிப்படுத்தியுள்ளனர். (அ)

## மன்னாரில்...

*545* பேர் இடம்பெயர்ந்துள்ளனர்.

அத்துடன், சீரற்ற காலநிலையில் கிளிநொச்சி மாவட்டத்தில் ஆயி ரத்து *626* பேர் பாதிக்கப்பட்டுள்ள னர். (அ)

## கிளிநொச்சி...

அவர்களுக்கான சமைத்த உணவுகள், அத்தியாவசிய பொருட்கள் வழங்கப்பட்டு வருகிறது. உப தபாலகம் உள்ளிட்ட பொது மக்கள் சேவை நிலையங்களும் வெள்ளத்தில் சிக்கியுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் நிலவிய சீரற்ற வானிலையால் சீரற்ற வானிலையால் *1661* குடும்பங்களை சேர்ந்த *5204* பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், *21* வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாகவும் மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது.

இன்று காலை *08.30* க்கு வெளியிடப்பட்ட புள்ளி விபரத்தில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், கரைச்சி மற்றும் கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுகளிலேயே இவ்வாறு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

கரைச்சி பிரதேச செயலாள் பிரிவில், *445* குடும்பங்களை சேர்ந்த *1452* பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், *05* வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

கண்டாவளை பிரதேச செயலாள் பிரிவில், *1216* குடும்பங்களை சேர்ந்த *3752* பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், *16* வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாக அப்புள்ளி விபரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வெள்ளம் வடிந்து வரும் நிலையில், தொடர்ந்தும் புள்ளி விபரங்கள் திரட்டப் பட்டு வருகின்றது. இதேவேளை, பாதிக்கப்பட்டவர்கள் உறவினர் வீடுகளில் தங்கியுள்ளதாக மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது.

தொடர்ந்தும் மக்கான எதிர்வு கூறல் உள்ளமையால், மக்கள் அவதானமாக செயற்படுமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. (அ)

## அமெரிக்கா...

படுகின்றது.

அண்மையில் இடம்பெற்ற பொதுஜன பெரமுன கட்சி மாநாட்டில் தேசிய அமைப்பாளர் பதவியிலிருந்து விலக பஸல் தீர்மானித்திருந்தார்.

இதனையடுத்து, குறித்த பதவிக்கு வேறு ஒருவரை நியமிக்காமல் பதவியை வெற்றிடமாகவே வைப்பதற்கு கட்சி நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அமெரிக்கா பயணமான பஸில் சுமார் ஒன்றரை மாத காலம் அங்கு தங்கியிருப்பார் என அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ)

## 26பாடசாலைகள்...

இதனால் முல்லைத்தீவு மாவட்டத்தில் 8 பாடசாலைகளும், கிளிநொச்சி மாவட்டத்தில் 7 பாடசாலைகளும், மன்னார் மாவட்டத்தில் 2 பாடசாலைகளும், வவுனியா மாவட்டத்தில் 9 பாடசாலைகளும் நேறறு கற்றல் செயற்பாடுகளுக்காக இயங்கவில்லை என்று வடக்கு மாகாணக் கல்வித் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை, வடக்கில் தொடர்ந்தும் அதிக மழை பொழிவதால் இன்று மேலும் பல பாடசாலைகள் இயங்க முடியாமல் பாதிப்படையக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (அ)

## ஜனவரி28இல்...

மேலும், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பிரதிநிதித்துவம் குறைவாக உள்ளது எனவும், பிரதேச ரீதியாக பிரதிநிதித்துவத்தைக் கூட்டுவது எனவும் இன்றைய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன் திருகோணமலையைப் பொறுத்தவரை திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்த சில கருத்துக்களுக்கு அமைவாக மேலதிகமாக ஆறு உறுப்பினர்களைத் தெரிவு செய்ய மாவட்டக் கிளைக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது - என்றார். (அ)

ஈழநாடு
Eelanadu

# புதையல் தோண்டிய நால்வர் கைதாகினர்

கொழும்பு, டிசெ. 19

தொல்பொருட்களை எடுக்கும் நோக்கத்தில் புதையல் தோண்டிய சந்தேகத்தில் நால்வரை கைது மகிந்தலை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் 21 முதல் 46 வரையான வயதுக்குட்பட்டவர்களாவர்.

அநுராதபுரம் - தொரமடலாவை - புதுக்குளம் பிரதேசத்தில் உள்ள பெண் ஒருவருக்கு சொத்தமான காணியில் புதையல் தோண்டப்படுவதாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் குறித்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மிகிந்தலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# கிழக்கின் கல்வி நடவடிக்கைகளில் அரசியல் தலையீடுகள் அதிகரிப்பு

## இலங்கை ஆசிரியர் சங்க தலைவர்




மட்டக்களப்பு, டிசெ. 19

கிழக்கு மாகாணத்தில் கல்வி நடவடிக்கைகளில் அரசியல் தலையீடுகள் அதிகரித்துவருகின்றன என்று இலங்கை ஆசிரியர் சங்க தலைவர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

மட்டு. ஊடக அமையத்தில் நேற்று நடந்த செய்தியாளர்கள் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும்,

“கிழக்கு மாகாணத்தில் கல்வி சம்பந்தப்பட்ட விடயங்களில் அரசியல் தலையீடுகள் அதிகரித்துக்கொண்டு செல்கின்றது. குறிப்பாக அதிபர் நியமனங்களில் அதிகளவில் அரசியல் தலையீடுகள் காணப்படுகின்றன.

பாடசாலைகளில் அதிபர் வெற்றிடம் ஏற்படும் பட்சத்தில் முறையாக விண்ணப்பங்கள் கோரப்பட்டு நேர்முகத் தேர்வு நடைபெறும். ஆனால், கிழக்கில் அவ்வாறு நடப்பதில்லை.

தனிப்பட்ட விருப்பங்களுக்கேற்ப அதிபர் நியமனங்கள் இடம்பெறகின்றன. அரசியல் கட்சி ரீதியில் பாடசாலைகளில் அதிபர் நியமனங்கள் இடம்பெறுகின்றன. இதன்காரணமாக தகுதியுடைய அதிபர்கள் உரிய முறையில் பதவியில் அமர்த்தப்படுவதில்லை.

தற்போது நாடு முழுவதும் அதிபர் சேவை தரம் 3 நியமனங்கள் 4,672 பேருக்கு வழங்கப்பட்டுள்ளது. அதில் கிழக்கு மாகாணத்தில் 487 பேருக்கும், வட மாகாணத்தில் 259 பேருக்கும் நியமனம் வழங்கப்பட்டுள்ளது. குறித்த நியமனங்கள் வழங்ப்படுவதிலும் அரசியல் தலையீடுகள் காணப்படுகின்றன.

இலங்கை ஆசிரியர் சங்கம் என்கின்ற வகையில் இச்செயற்பாடுகளை வன்மையாக கண்டிக்கின்றோம். உடனடியாக இச்செயற்பாடுகள் நிறுத்தப்பட்டு தகுதியுடையவர்கள் பதவியில் அமர்த்தப்பட வேண்டும்” என தெரிவித்தார். (ஐ)

# மாணவர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் சகல செயல்பாடுகளையும் ஒழியுங்கள்!

## விடுமுறை நிறைவு வரை காலக்கெடு பதில் பொலிஸ் மா அதிபர் பணிப்பு!

கொழும்பு, டிசெ. 19

**பாடசாலை சூழலில் மாணவர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய அனைத்து செயல்பாடுகளையும் ஒழிக்குமாறு பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் உத்தரவிட்டுள்ளார்.**

பாடசாலை விடுமுறை நிறைவடைவதற்குள் இதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு அவர் வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பு வேலுவன வித்தியாலயத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துரைக்கும் போதே பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

இதன்படி, ஒவ்வொரு பாடசாலையில் இருந்தும் 500 மீற்றர் தொலைவிற்குள் மாணவர்களுக்கு தீங்கு விளைவிக்கும் வகையிலான பொருட்களை விற்பனை செய்யும் அனைத்து இடங்களும் அகற்றப்பட வேண்டுமென அவர் அறிவித்துள்ளார்.

இதன்படி, பாடசாலை விடுமுறை நாட்களில் அவ்வாறான இடங்களை சோதனையிட்டு அகற்றுமாறு பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார். (ஐ)

# நாட்டு மக்கள்மீது வரியை சுமத்தாது வருமானத்தை அதிகரிக்க முடியும்!

## சம்பிக்க ரணவக்க எம். பி.

கொழும்பு, டிசெ. 19

மக்கள் மீது எவ்வித வரிச் சுமைகளையும் ஏற்றாது நாட்டின் வருமானத்தை 50 வீதமாக அதிகரிக்க முடியும் ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

கும்புறுப்பிட்டி பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஐக்கிய குடியரசு முன்னணியின் கூட்டத்தில் கலந்துக்கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

நாட்டுக்குள் எவ்விதமான வரிகளையும் செலுத்தாது ஆடம்பர வாழ்க்கையை வாழும் செல்வந்த வகுப்பினர் இருக்கின்றனர். அந்த பணக்கார வகுப்பினர் வருமானத்தை சரியாக கண்டறிய அரசாங்கம் அச்சப்படுகிறது.

இவர்களின் வருவாய்,செலவுகள் தொடர்பான விபரங்கள் சரியாக முறையில் கிடைக்காதது சிக்கலுக்குரியது. மருத்துவர்களின் சம்பளம் பற்றிய விவரங்கள் கிடைப்பதால், அதற்கு வரி அறவிடப்படுகிறது. செல்வந்தர்களின் வருமானம் தொடர்பான விபரங்கள் கிடைப்பதில்லை வரி அறவிடுதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

செல்வந்தர்களின் வருமானத்தை அறியும் விதம் தொடர்பான வேலைத்திட்டத்தை உருவாக்கினால், புதிதாக வரிகள் எதுவும் தேவையில்லை.

மோசடியாளர்களான மூன்று முதல் நான்கு வர்த்தகர்கள் நன்றாக சம்பாதித்து விட்டு, வரிகளை செலுத்தாமல் இருக்கின்றனர். 5 கோடி ரூபாய்க்கும் மேல் வரி செலுத்துவோர் சுமார் 2 ஆயிரத்து 500 பேர் இருக்கின்றனர். அதில் சிக்காத மேலும் 2 ஆயிரத்து 500 பேர் இருக்கின்றனர்.

இவர்களுக்கு கிடைக்கும் உண்மையான வருமானத்தை பெற்றுக்கொள்ளும் முறையை ஒரு மாதத்தில் உருவாக்கி விடலாம். எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் சிறுவர்கள் முதல் முதியோர்களிடம் மூவாயிரம் கோடி ரூபாய் பெறுமதி சேர் வரியை அறவிட அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது.

மக்களின் வருமானம் குறைந்துள்ளதால், மக்களுக்கு இப்படியான வரியை செலுத்த முடியுமா என்ற கேள்வி எழுந்துள்ளது - என்றும் அவர் சொன்னார். (ஐ)

# 3 ஆறுகள் பெருக்கெடுத்தன; மன்னாருக்கு வெள்ள அபாயம்!

## இதுவரை 632 குடும்பங்கள் பாதிப்பு

மன்னார், டிசெ. 19

மன்னார் மாவட்டத்தின் மூன்று பிரதான ஆறுகளின் நீர் மட்டம் உயர்ந்து செல்வதால் தாழ்நிலப் பகுதிகளின் மக்கள் வெள்ள அனர்த்தத்தில் பாதிக்கப்படுவதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன என்று மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் மாவட்ட உதவி பணிப்பாளர் கே. திலீபன் தெரிவித்தார்.

நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இந்த விடயத்தை தெரிவித்தார்.

மேலும், “நாட்டில் தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக மன்னார் மாவட்டத்தில் நான்கு பிரதேச செயலாளர் பிரிவுகளில் வெள்ள பாதிப்புகள் ஏற்பட்டுள்ளது. மன்னார் மாவட்டத்தில் மொத்தமாக 632 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 245 நபர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மாவட்டத்தில் தற்போது 4 தற்காலிக நலன்புரி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளது. மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள தேவன் பிட்டி கிராமத்தில் 3 நலன்புரி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளது.இங்கு 131 குடும்பங்களைச் சேர்ந்த 438 நபர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

மடு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பெரிய பண்டிவிரிச்சான் கிராம சேவையாளர் பிரிவில் 30 குடும்பங்களைச் சேர்ந்த 83 நபர்கள் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான சமைத்த உணவுகள் மற்றும் ஏனைய நிவாரண உதவிகளை பிரதேசச் செயலகம் கிராம அலுவலகர் ஊடாக வழங்கி வைக்கப்படுகின்றது.

இம் மக்களுக்கு மேலதிக உதவிகள் அப்பகுதிகளில் உள்ள இராணுவம் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களினாலும் உடனடித் தேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

மன்னார் மாவட்டத்தின் மூன்று பிரதான ஆறுகளின் நீர் மட்டம் உயர்ந்து செல்வதால் தாழ் நிலப் பகுதிகளில் உள்ள மக்கள் வெள்ள அனர்த்தத்தில் பாதிக்கப்படுவதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன.

தற்போது அருவி ஆற்றின் நீர்மட்டம் உயர்வாக காணப்படுகின்ற மையினால் எதிர்வரும் நாட்களில் மழை பெய்யும் காரணத்தினாலும் ஆற்று வெள்ளம் அதிகரிக்க வாய்ப்புள்ளது.

எனவே, தாழ் நிலப் பகுதிகளில் வாழ்கின்ற மக்கள் மிகவும் அவதானத்துடனும்,விழிப்புடன் இருக்க வேண்டும்.அவ்வாறான அனர்த்த நிலை ஏற்படுமாக இருந்தால் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தோடும்,பிரதேச செயலாளர்கள் ஊடாகவும் வழங்கப்படும் அறிவுறுத்தல்களுக்கு அமைய செயல்பாடுகளை முன்னெடுக்க முடியும்.

மல்வத்து ஓயாவின் நீர் மட்டம் உயர்ந்து காணப்படுகிறது. இதனால் குஞ்சுக்குளம் ஊடாக பாயும் நீர் மாட்டம் ஒரு அடி இருக்கும் மையினால் குஞ்சுக்குளம் செல்லும் பாதை பாதிக்கப்பட்டுள்ளது.

எனவே, குறித்த பாதையூடாக பயணம் செய்யும் மக்கள் அவதானத்துடன் செல்ல வேண்டும்.ராணுவம் மற்றும் பாதுகாப்பு துறையினரின் ஆலோசனைக்கு அமைவாக பயணங்கள் பாதுகாப்புடன் முன்னெடுக்க வேண்டும் - என்றார். (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 19.12.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.




## ரோஹித்தின் பங்களிப்பு முன்பைவிட குறைந்துள்ளது

### சுனில் கவாஸ்கர்

மும்பை, டிசெ. 19

கடந்த இரண்டு ஆண்டுகளில் ரோஹித்தின் பங்களிப்பு துடுப்பாட்டத்திலும் கொஞ்சம் குறைந்துள்ளது என்று இந்திய அணியின் முன்னாள் தலைவர் சுனில் கவாஸ்கர் தெரிவித்துள்ளார்.

இந்தியன் பிறீமியர் லீக் (ஐ. பி. எல்.) 2024 பருவம் தொடங்குவதற்கு சில மாதங்களே உள்ள நிலையில், மும்பை இந்தியன்ஸ் அணியின் தலைமை பொறுப்பை ரோஹித் சர்மாவுக்கு பதிலாக ஹர்திக் பாண்ட்யாவிடம் ஒப்படைக்கப்பட்டதுதான் கிரிக்கெட் உலகில் அதிகம் பேசப்படும் விஷயமாக உள்ளது. நடந்து முடிந்த ஒரு நாள் கிரிக்கெட் உலகக் கிண்ணத் தொடரில் இந்திய அணியை ரோகித் திறம்பட வழிநடத்திய நிலையில் இந்த மாற்றம் விவாத பொருளாகி உள்ளது.

இந்த மாற்றம் குறித்து பேசியுள்ள இந்திய அணியின் முன்னாள் தலைவர் சுனில் கவாஸ்கர், ”இந்த விஷயத்தில் சரி, தவறுகளுக்குள் நாம் செல்லக்கூடாது. அணியின் நலனுக்காக அவர்கள் முடிவெடுத்துள்ளார்கள். கடந்த இரண்டு ஆண்டுகளில் ரோஹித்தின் பங்களிப்பு துடுப்பாட்டத்திலும் கொஞ்சம் குறைந்துள்ளது. கடந்த ஆண்டு அணியை பிளே ஒவ் சுற்றுக்கு தகுதிபெற வைத்தார். எனினும் அதற்கு முந்தைய ஆண்டு 9ஆம் இடமோ, 10ஆம் இடமோதான் அவர் தலைமையில் மும்பை அணி பிடித்தது.

தொடர்ந்து அதிகமான கிரிக்கெட் விளையாடி வருவதால் ரோஹித் கொஞ்சம் சோர்வாக இருந்திருக்கலாம். இந்திய அணி மற்றும் ஐ. பி. எல்., தலைமை என பணிச்சுமையும் இதற்கு ஒரு காரணமாக இருக்கலாம். என்றாலும், ஹார்திக் பாண்ட்யா ஓர் இளம் தலவர் என்பதை மனதில் வைத்து இந்த பெரிய மாற்றத்தை மும்பை அணி நிர்வாகம் எடுத்திருக்கலாம். ஹார்திக் இரண்டு முறை குஜராத்தை இறுதிப் போட்டிக்கு அழைத்து சென்றுள்ளார். 2022இல் பட்டத்தை வெல்ல வைத்துள்ளார். இதையெல்லாம் கருத்தில் கொண்டுதான் அவரை தலைவராக மாற்றியுள்ளார்கள் என நினைக்கிறேன். சில நேரங்களில் புதிய சிந்தனைகள் தேவை. அத்தகைய புதிய சிந்தனையை மும்பை அணிக்கு ஹார்திக் வழங்குவார்” என்று தெரிவித்துள்ளார். (ஐ)

## 500 விக்கெட்கள் வீழ்த்தி நதன் லயன் சாதனை!




பெர்த், டிசெ. 19

டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் 500 விக்கெட்களை வீழ்த்தி அவுஸ்திரேலிய வீரர் நதன் லயன் சாதனை புரிந்துள்ளார்.

பெர்த்தில் நடைபெற்று வந்த பாகிஸ்தானுக்கு எதிரான முதலாவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் வீரர் பாஹீம் அஷ்ரப்பின் விக்கெட்டை நதன் லயன் வீழ்த்தினார். இது டெஸ்ட் போட்டிகளில் அவரது 500ஆவது விக்கெட்டாக அமைந்தது.

இதன்மூலம் டெஸ்ட் போட்டிகளில் 500 விக்கெட்களை வீழ்த்திய 8ஆவது பந்துவீச்சாளர் என்ற சாதனையை அவர் படைத்தார். 36 வயதாகும் நதன் லயன், டெஸ்ட போட்டிகளில் இதுவரை 501 விக்கெட்களை வீழ்த்தி சாதனை படைத்துள்ளார். டெஸ்ட் போட்டிகளில் அதிக விக்கெட்கள் வீழ்த்தியவர் வரிசையில் இலங்கை வீரர் முத்தையா முரளிதரன் 800 விக்கெட்களுடன் முதலிடத்தில் உள்ளார். (ஐ)

# பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் 360 ஓட்டங்களால் ஆஸி. வெற்றி!

பெர்த், டிசெ. 19

பாகிஸ்தானுக்கு எதிரான முதல் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் அவுஸ்திரேலிய அணி 360 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

பாகிஸ்தான் - அவுஸ்திரேலிய அணிகளின் போட்டி பெர்த்தில் நடந்தது. இந்த போட்டியில் அவுஸ்திரேலிய அணி முதல் இன்னிங்ஸில் 487 ஓட்டங்கள் குவித்தது. டேவிட் வோர்ணர் 164 ஓட்டங்கள் குவித்தார். இதையடுத்து முதல் இன்னிங்ஸை விளையாடிய பாகிஸ்தான் அணி 271 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தது. இதைத் தொடர்ந்து 216 ஓட்டங்கள் முன்னிலையுடன் 2ஆவது இன்னிங்ஸை விளையாடிய அவுஸ்திரேலிய அணி 3ஆம் நாள் ஆட்டத்தின் முடிவில் 33 ஓவர்களில் 2 விக்கெட்கள் இழப்புக்கு 84 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

டேவிட் வோர்ணர் 0, மோர்னஷ் லபுஷான் 2 ஓட்டங்களில் குர்ரம் ஷாசாத் பந்தில் ஆட்டமிழந்தனர். உஸ்மான் கவாஜா 34, ஸ்டீவ் ஸ்மித் 43 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தனர். கைவசம்8 விக்கெட்கள் இருக்க 300 ஓட்டங்கள் முன்னிலை பெற்ற அவுஸ்திரேலிய அணி நேற்று முன்தினம் 4ஆவது நாள் ஆட்டத்தை தொடர்ந்து விளையாடியது.

இந்நிலையில் தொடர்ந்து அபாரமாக விளையாடினார் கவாஜா. உஸ்மான் கவாஜா 90 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஷாஹீன் அப்ரிடி பந்தில்ஆட்டமிழந்தார். ஸ்டீவன் ஸ்மித் 45 ஓட்டங்களும், டிராவிஸ் ஹெட் 14 ஓட்டங்களும் எடுத்து வீழ்ந்தனர்.

மறுமுனையில் அதிரடியாக விளையாடிய மிற்செல் மார்ஷ் 68 பந்துகளில் 63 ஓட்டங்கள் குவித்து ஆட்டமிழக்காமல் இருந்தார். 5 விக்கெட்கள் இழப்புக்கு அவுஸ்திரேலிய அணி 233 ஓட்டங்கள் குவித்திருந்த நிலையில் 2ஆவது இன்னிங்ஸை நிறுத்துவதாக அறிவித்தது. இதையடுத்து 450 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலையில் பாகிஸ்தான் அணி 2ஆவது இன்னிங்ஸை விளையாடியது.




ஆனால், மிற்செல் ஸ்டார்க், ஜோஷ் ஹசில்வுட், பாட் கம்மின்ஸ், நதன் லயன் ஆகியோரின் அபார பந்துவீச்சால் அந்த அணி 30.2 ஓவர்களிலேயே 89 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்களையும் இழந்தது. இதையடுத்து அவுஸ்திரேலிய அணி 360 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றுள்ளது.

பாகிஸ்தான் அணியின் அப்துல்லா ஷபீக் 2, இமாம் உல் ஹக் 10, ஷான் மசூத் 2, பாபர் அஸம் 14, சவுத் ஷகீல் 24, சர்பிராஸ் அகமது4, ஆகா சல்மான் 5, ஆமிர் ஜமால்0, குர்ரம் ஷாசாத் 0, பாஹீம் அஷ்ரப் 5 ரன்களுக்கு ஆட்டமிழந்தனர்.

மிற்செல் ஸ்டார்க், ஜோஷ் ஹசில்வுட் ஆகியோர் தலா 3 விக்கெட்களைக் கைப்பற்றினர். நதன் லயன் 2 விக்கெட்களையும், பட் கம்மின்ஸ் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தி அணிக்கு வெற்றி தேடிக் கொடுத்தனர்.

சிறப்பாக விளையாடிய மிட்செல் மார்ஷ் ஆட்டநாயகனாகத் தேர்வு செய்யப்பட்டார்.

இதையடுத்து 3 டெஸ்ட் போட்டிகள் கொண்ட இந்தத்தொடரில் அவுஸ்திரேலிய அணி 1-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது. (ஐ)

# தென்னாபிரிக்காவுடனான போட்டி இந்திய அணி வெற்றி பெற்றது

ஜொகன்னர்ஸ்பேர்க், டிசெ. 19

தென்னாபிரிக்க அணிக்கு எதிரான முதல் ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி 8 விக்கெட்கள் வித்தியாசத்தில் அபார வெற்றியைப் பெற்றது. இந்திய அணி வீரர்கள் அர்ஷ்தீப் சிங், அவேஷ் கான் ஆகியோரது சிறப்பான பந்துவீச்சால் இந்திய அணியின் வெற்றி எளிதானது.




தென்னாபிரிக்காவில் சுற்றுப்பயணம் செய்து இருபது - 20, ஒருநாள் கிரிக்கெட் போட்டி, டெஸ்ட் போட்டிகளில் இந்திய அணி விளையாடி வருகிறது. முதலில் நடைபெற்ற சர்வதேச ரி -20 தொடரானது 1-1 என்றகணக்கில் சமனில் முடிவடைந்தது.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் இரு அணிகளுக்கு இடையிலான முதலாவது ஒரு நாள் கிரிக்கெட் போட்டி யில் மோதின.

முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 27.3 ஓவர்களில் 116 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. அர்ஷ்தீப் சிங், அவேஷ் கானின் அனல் பறக்கும் பந்துவீச்சில் தென்னாபிரிக்க அணியின் விக்கெட்கள் சீரான இடைவெளியில் விழுந்தன.

தொடக்க வீரர்கள் ரீசா ஹென்றிக்ஸ் 0, டோனி டே ஜோர்ஸி 28, வான் டெர் டஸ்ஸன் 0, ஹெய்ன்ரிச் கிளாசன் 6, ஆன்டிலே பெலுக்வாயோ 33 ஆகியோரை வெளியேற்றினார் அர்ஷ்தீப் சிங். அணித்தலைவர் அய்டன் மார்க்ரம் 12 ஓட்டங்கள் சேர்த்து அவேஷ் கான் பந்தில் போல்ட் ஆனார். அதைப் போலவே அதிரடி வீரர் டேவிட் மில்லர், அவேஷ் கான் பந்து வீச்சில் ராகுலிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார். அவர் 2 ஓட்டங்கள் மட்டுமே சேர்த்தார். வியான் முல்டர் ஓட்டம் எடுக்காமலேயே அவேஷ் கான் பந்தில் எல். பி. டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார். கேசவ் மஹராஜ் 4 ஓட்டங்கள் சேர்த்த நிலையில் அவேஷ் கான் பந்தில், ருதுராஜ் கெய்க்வாட்டிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

கடைசி விக்கெட்டாக நான்ட்ரே பர்கர், குல்தீப் யாதவ் பந்தில் போல்ட் ஆனார். அவர் 7 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தார். தபரைஸ் ஷம்ஸி 11 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார். அணியில் அதிக பட்சமாக பெலுக்வாயோ 33 ஓட்டங்கள் சேர்த்தார். இல்லாவிட்டால் தென்னாபிரிக்க அணி 100 ஓட்டங்களையே எட்டியிருக்காது. இந்திய அணி தரப்பில் அர்ஷ்தீப் சிங் 10 ஓவர்கள் பந்துவீசி 37 ஓட்டங்கள் மட்டுமே கொடுத்து 5 விக்கெட்களைக் கைப்பற்றினார். அவேஷ் கான் 8 ஓவர்கள் பந்துவீசி 27 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 4 விக்கெட்களைச் சாய்த்தார். குல்தீப் யாதவ் ஒரு விக்கெட்டை வீழ்த்தினார்.

பின்னர் 117 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இந்திய அணி விளையாடியது. தொடக்க ஆட்டக்காரர்களாக ருதுராஜ் கெய்க்வாட்டும், சாய் சுதர்ஷனும் களமிறங்கினர். ருதுராஜ் 5 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில் வியான் முல்டர் பந்துவீச்சில் எல். பி. டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார். பின்னர் சாய் சுதர்ஷனுடன், ஸ்ரேயஸ் ஐயர் ஜோடி சேர்ந்தார். இருவரும் அதிரடியாக விளையாடி ஓட்டங்களைக் குவித்தனர். இருவரும் அடுத்தடுத்து அரை சதங்களைக் கடந்தனர்.

52 ஓட்டங்களை எடுத்திருந்த நிலையில் ஸ்ரேயஸ் ஐயர், பெலுக்வாயோ பந்துவீச்சில் மில்லரிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார். அவரது ஸ்கோரில் 6 பௌண்ட்ரிகளும், ஒரு சிக்ஸரும் அடங்கும். பின்னர் வந்த திலக் வர்மாவும், சாய் சுதர்ஷனும் வெற்றிக்குத் தேவையான ஓட்டங்களை எடுத்து அணியை வெற்றி பெற செய்தனர். 16.4 ஓவர்களில் இந்திய அணி 2 விக்கெட் இழப்புக்கு 117 ஓட்டங்கள் எடுத்து வெற்றி கண்டது.

சாய் சுதர்ஷன் 55 ஓட்டங்களும், திலக் வர்மா ஒரு ரன்னும் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தனர். சாய் சுதர்ஷன் 43 பந்துகளில் இந்த ஓட்டங்களைக் குவித்தார். அவரது ஸ்கோரில் 9 பௌண்ட்ரிகள் அடங்கும். இந்த வெற்றியின் மூலம் 3 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் இந்திய அணி 1-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது. ஆட்டநாயகனாக 5 விக்கெட்களை வீழ்த்திய அர்ஷ்தீப் சிங் தேர்வு செய்யப்பட்டார். (ஐ)

# இமாலயப் பிரகடனம் - பின்னணியும் வரலாறும்

அ. நிக்ஸன்

அதிகளவு சிங்கள உறுப்பினர்களைக் கொண்ட இலங்கை ஒற்றை ஆட்சி நாடாளுமன்றத்தில் ஈழத்தமிழர் தேசியச் சிக்கலுக்குரிய தீர்வை முன்வைக்க முடியாது என்பதாலேயே “ஈழத்தமிழர் தேசியம்” என்ற கோட்பாடு எழுந்தது. சிங்களவர் ஈழத்தமிழர் ஆகிய இரு அரசியல் சமூகங்களும் தேசங்களாக ஒற்றையாட்சி நாடாளுமன்றத்திற்கு வெளியே கூட்டாக நின்று நிர்வாக அதிகாரத்தை அல்ல ஆட்சி அதிகாரத்தைப் பங்கிடுவதன் மூலமே இனப்பிரச்சினைக்குரிய நிரந்தர அரசியல் தீர்வை எட்ட முடியும். இதற்கான கூட்டுச் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டிய தமிழ்த் தேசியக் கட்சிகள் தனித்தனியாகச் செயற்பட்டு ஒற்றையாட்சி நாடாளுமன்ற ஆசனங்களைக் கைப்பற்றும் வியூகங்களுடன் மாத்திரம் இயங்கி வருவதால் மிகவும் பலவீனமான நிலைமை அதலபாதாளமாக வெளித்தோற்றத்துக்குத் தெரிகிறது.

ஆனால், மக்கள் மட்டத்தில் நீறுபூத்த நெருப்பாக தேசிய நிலைப்பாடு வேரூன்றியுள்ளது.

இந்தச் சூழலில் புலம்பெயர் அமைப்புகளின் கூட்டு என்று தவறாகக் கூறிக்கொள்ளும் சில தனிநபர்களின் கூட்டு ஒன்று வல்லாதிக்க நாடுகளின் புவிசார் அரசியல் - பொருளாதார நலன்களைக் கருத்திற்கொண்டு இயங்கும் தன்னார்வ சக்திகளால் தயார்ப்படுத்தப்பட்டு மக்கள் மயப்பட்ட தேசிய நிலைப்பாட்டை நிலைமாறச் செய்யும் கைங்கரியத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. இதுவே உலகத் தமிழர் பேரவை.

“யதார்த்த அரசியல்” என்று பேசுவோரும் “முற்போக்குத் தமிழர்” மற்றும் “மிதவாத அரசியல் தலைவர்கள்” என்று மார்தட்டுவோரும் 2009 மே மாதத்திற்குப் பின்னரான சூழலில் மிதமிஞ்சியுள்ள சூழலைப் பயன்படுத்தி ஈழத் தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை நுட்பமாக மறுதலிக்கவும், ‘இன நல்லிணக்கம்” ‘மத நல்லிணக்கம்” என்ற போர்வையில் மீண்டும் இணக்க அரசியற் பொறிக்குள் ஈழத்தமிழர் தேசிய அரசியலைத் தள்ளிவிடவும் வெளிப்பட்டுள்ளார்கள். இது ஒன்றும் புதிய போக்கு அல்ல. பழைய பொறிகளின் புதிய தொடர்ச்சியே.

2015 மைத்திரி-ரணில் அரசாங்கத்தில் ஆரம்பித்த இந்த “நல்லிணக்கப் பொறி” கோட்டாபய ராஜபக்ச 2020 இல் ஜனாதிபதியான பின்னர் வேறொரு வடிவை எடுத்தது. தமது திட்டங்களுக்கு ஒத்துழைக்க கோட்டபாய மறுத்தபோது ஆட்சிமாற்ற வேலைத்திட்டத்துக்கு சிங்களத் தரப்புகள் தயார்ப்படுத்தப்பட்டன. அதற்கு தமிழர்களுக்கான சர்வதேச நீதியும் அரசியல் தீர்வும் கிடப்பில் போடப்பட்டது.

போலித் தன்மையுள்ள நல்லிணக்கம் என்ற பொருத்தமற்ற கதைக்கும், சென்ற மாதம் போலியாக சித்திரிக்கப்பட்ட துவாரகாவின் பெயரில் வெளியான மாவீரர் நாள் அறிக்கைக்கும் ஒரே பின்புலம் இருப்பது வெளிப்படையாகவோ மறைமுகமாகவோ தெரியாது விட்டாலும் இவை இரண்டுக்கும் பின்னால் மறைமுகமான சக்திகள் பின்னணி என்பது பட்டவர்த்தனம்.

குறிப்பாக 2009 இற்குப் பின்னரான சூழலில் மேற்குலகின் புவிசார் அரசியல் பொருளாதார நலன்களைக் கருத்திற்கொண்டு அரசுகளுக்கும் அவற்றின் தூதரகங்களுக்கும் அப்பால் ஆனால் அதே நலன்களுக்கு ஏற்பச் செயற்படும் பிராந்திய, சர்வதேச மற்றும் உளவு மற்றும் தன்னார்வ நிறுவனங்களின் செயற்பாடுகள் ஊடாக விளைந்ததுதான் இந்த இமாலயப் பிரகடனம்.

சுரேன் சுரேந்திரன் என்பவரின் தலைமையிலான உலகத் தமிழர் பேரவை என்ற தனிமனிதர் குழு இந்தச் சர்வதேச தன்னார்வ நிறுவனங்களின் தேவைக்கு இயைந்துள்ளது கண்கூடு.

சிறந்த இலங்கைக்கான சங்கபீடம் **(Sangha for Better Sri Lanka)** என்ற அமைப்பும் சுரேந்திரனின் திட்டத்துடன் இணைந்துள்ளது. 2015 ஆம் ஆண்டில் அப்போதைய அமைச்சரான மறைந்த மங்கள சமரவீரவின் மறைமுக அனுசரணையுடன் இலங்கைக்கு வந்து சில பௌத்த துறவிகளுடன் சுகாதார வேலைத் திட்டங்களில் ஈடுபட்ட புலம்பெயர் ஈழத்தமிழர் தனிநபர்ச் செயற்பாட்டாளர் குழுக்கள் அப்போதே தயார்ப்படுத்தப்பட்டிருந்தன.





**சுயநிர்ணய உரிமையைக் கைவிடுதல், இன அழிப்புக்கான சர்வதேச விசாரணை தொடர்பான கோரிக்கைகளைத் தவிர்த்தல், இலங்கை அரச கட்டமைப்புக்குள் ஐக்கியம் என்ற பெயரில் ஒற்றையாட்சிக்குள்ளும் ஒத்துப்போதல் மற்றும் ஈழத்தமிழர் என்ற அடையாளத்தைக் கைவிட்டு இலங்கையர் என்ற அடையாளத்தைத் தழுவுதல் போன்றவற்குத் ஈழத் தமிழ்த்தேசியக் கட்சிகள் மற்றும் சிவில் சமூக அமைப்புகளை இணங்க வைப்பது இந்தத் தன்னார்வ நிறுவனங்களின் உத்திகளில் ஒன்று.**

சுயநிர்ணய உரிமையைக் கைவிடுதல், இன அழிப்புக்கான சர்வதேச விசாரணை தொடர்பான கோரிக்கைகளைத் தவிர்த்தல், இலங்கை அரச கட்டமைப்புக்குள் ஐக்கியம் என்ற பெயரில் ஒற்றையாட்சிக்குள்ளும் ஒத்துப்போதல் மற்றும் ஈழத்தமிழர் என்ற அடையாளத்தைக் கைவிட்டு இலங்கையர் என்ற அடையாளத்தைத் தழுவுதல் போன்றவற்குத் ஈழத் தமிழ்த் தேசியக் கட்சிகள் மற்றும் சிவில் சமூக அமைப்புகளை இணங்க வைப்பது இந்தத் தன்னார்வ நிறுவனங்களின் உத்திகளில் ஒன்று. இதனை அடிப்படையாகக் கொண்டு வெளிநாடுகளில், குறிப்பாக ஜேர்மனி, சுவிற்சர்லாந்து, ஒஸ்ரியா, ஸ்கண்டிநேவிய நாடுகளில் 2009 ஆம் ஆண்டின் பின்னர் அவ்வப்போது கூட்டங்கள் தொடர்ச்சியாக நடத்தப்பட்டிருக்கின்றன.

இக் கூட்டங்களில் தமிழரசுக் கட்சியின் பேச்சாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் உள்ளிட்ட பல தாயக அரசியற் தலைவர்களும் சிவில் சமூகப் பிரதிநிதிகளும் மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் என்ற பெயரில் இயங்குபவர்களும் மற்றும் உலகத் தமிழர் பேரவையின் தலைவர் சுரேன் சுரேந்திரன், பிரித்தானியத் தமிழர் பேரவையின் தலைவர் ரவி குமார் (ரூட் ரவி) மற்றும் தாயக சிவில் சமூகச் செயற்பாட்டாளரும் சட்டத்தரணியுமான கலாநிதி குமாரவேல் குருபரன் உள்ளிட்டோர் இக் கூட்டங்களில் பங்குபற்றியிருக்கின்றனர்.

இவர்களில் ஒரு சாரார் மேற்கின் நலன்களுக்கு ஒத்துப்போய் தமிழர் நலன்களை ஆகுதியாக்கக் கூடியவர்கள் மறுசாரார் மேற்கின் நலன்களோடு ஒத்துப்போய் பேரம் பேசக் கூடியவர்கள். இரண்டு முனைகளுக்கும் மாறி மாறிப் பயணித்து தாம் யார் என்பதைத் தெளிவாகச் சமுதாயத்துக்கு அடையாளம் காட்டாதவர்களும் இவர்களுள் அடங்குவர். ஆகவே, எவர் எவர் எப்படிப்பட்டவர் என்ற விவாதம் இங்கு அவசியமற்றது. என்ன நடக்கிறது என்பதை உன்னிப்பாக விளங்கிக் கொள்வதே அடுத்த கட்ட நடவடிக்கைக்கு அவசியமானது.

2009 ஆம் ஆண்டின் பின்னர் நடந்த இக் கூட்டங்கள் வெவ்வேறாகவும், கூட்டாகவும் தனித் தனியாகவும் மிக இரகசியமான முறையில் மேற்கு நாடுகளின் நகரங்களில விமானப் பயண மற்றும் தங்குமிட வசதிகளை வழங்கி நடத்தப்பட்டன. இக் கூட்டங்களில் பேசப்பட்ட விடயங்கள் எந்த ஒரு ஊடகங்களிலும் நேரடியாக வெளிவராது. ஏனெனில், அவ்வாறு எழுதப்படக்கூடாது என்பது அக்கூட்டத்தை நடாத்திய தன்னார்வ நிறுவனங்களின் ஏற்பாட்டாளர்களால் நிலைப்பாடாக இருந்தது. எங்கே ஒளிவு மறைவாக இருக்கவேண்டும் என்கே வெளிப்படைத் தன்மை பற்றி பேசவேண்டும் என்பதை ஏற்பாட்டாளர்களே கையாளுவர்.

ஆனாலும் கூட்டங்களில் பேசப்பட்ட விடயங்களை இந்தத் தன்னார்வ நிறுவனங்களின் ஏற்பாட்டாளர்கள் ஒரு விடயத்தில் குறியாக இருப்பர். பேசி உடன்பட்டவற்றை, அல்லது உடன்படாதவற்றைக் கூட ஏதோ ஒரு வகையில் ஒரு அறிக்கையாகத் தொகுத்துக் கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவரின் ஒப்புதலைப் பெற்றது போல ஆவணப்படுத்திக் கொள்வர்.

இருந்தபோதும், இக் கூட்டங்களில் நடந்த பல விடயங்கள் வெளியே அரசல் புரசலாக அவ்வப்போது கசிந்திருக்கின்றன. இக் கூட்டங்களில் கலந்துகொண்ட சுரேன் சுரேந்திரன் போன்ற சிலரைத் தவிர்ந்த ஏனைய ஈழத்தமிழர் பிரதிநிதிகளுள் பலர் ஈழத்தமிழர்களின் அரசியல் பயணம் தொடர்பான பிரதான காரண-காரியங்களை விட்டுக்கொடுக்காமல் வலியுறுத்தியும் வந்துள்ளார்கள்.

ஆனாலும் “உங்கள் இலக்கு” அதாவது சுயநிர்ணய உரிமையின் பாற்பட்ட அரசியற் தீர்வு என்ற இலக்கை அடைவதற்கு கூட்டத்தில் தங்களால் முன்மொழியப்பட்ட விடயங்களை ஆரம்பப் புள்ளியாக ஏற்றுக் கொள்ளுங்கள் என்றும் பின்னர் பையப்பைய உங்கள் இலக்கை அடைய முடியும் எனவும் இந்தத் தன்னார்வ நிறுவனங்கள் தமது போதனைகளாக அவ்வப்போது அறிவுறுத்தி வந்துள்ளன.

சுயநிர்ணய உரிமையைக் கைவிடுதல், இன அழிப்பை சர்வதேச விசாரணைக்கு உள்ளாக்கவேண்டும் என்ற கோரிக்கையை நழுவவிடுதல், இலங்கையர் என்ற அடையாளத்தை ஒப்புக்கொள்ளுதல் என்ற பிரதான நோக்கங்களை சுமந்திரன், சுரேன் சுரேந்திரன் ஆகிய சிலரைத் தவிர ஏனையோர் ஏற்க மறுத்திருந்தனர்.

இதன் காரணமாக இத் தன்னார்வ நிறுவனங்களின் இத்தகைய செயற்பாடுகள் பிசுபிசுத்துப் பேயிருந்தன.

2009 இற்கு முன்னர் அல்லது 2009 இல் உருவாகி உலகம் முழுவதிலும் மக்கள் ஆதரவோடு செயற்பட்டு வந்த பதினான்கு புலம்பெயர் அமைப்புகளை இணைத்து கூட்டாக உலகத் தமிழர் பேரவை 2009 இல் உருவாக்கப்பட்டது.

அந்தக் கூட்டின் முதல் தலைவராக இலங்கையில் கடந்த காலத்தில் ஒலிம்பிக் வீரராக புகழ்பெற்று பின்னர் அமெரிக்காவில் வதிந்துவரும் நாகலிங்கம் எதிர்வீரசிங்கம் என்பவர் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டிருந்தார். இவரின் நண்பர்கள் பலரும் இவரை “எதிர்” என்று அழைப்பர்.

இவர் ரவி குமாருடைய நெருங்கிய நண்பராகவும் பல காலத் தொடர்புடையவர் என்று இவர்கள் இருவரையும் நன்கு அறிந்த பிரித்தானிய வட்டாரங்கள் கூறுகின்றன.

2010 இல் இலங்கையில் ஜனாதிபதித் தேர்தல் நெருங்கியபோது தமிழர்கள் சார்பான பொது வேட்பாளராக எதிரைப் போட்டியிடுமாறு அமெரிக்கத் தரப்புகள் அறிவுரை வழங்கியிருந்தன. இது அப்போதிருந்த உலகத் தமிழர் பேரவை என்ற அமைப்பின் அங்கத்துவ அமைப்புகள் பலவற்றுக்கும் கேள்வியை எழுப்பியது.

இலங்கையின் கட்சி அரசியலுக்குள் செல்லுமாற வழங்கப்பட்ட அறிவுறுத்தலுக்கு அமைவாக கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் கட்சி உள்ளிட்ட தமிழர் தரப்புக் கட்சிகளை எதிர்வீரசிங்கம் நாடியிருந்தார். ஆனால் கஜேந்திரகுமார் போன்றோர் அதை நுட்பமாக மறுத்துவிட்டனர்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட வைப்பதன் மூலம் இலங்கையர் என்ற அடையாளத்துக்குள் ஈழத்தமிழர்களைத் தள்ளிவிட்டு நல்லிணக்க அரசியலைத் தனது நலன்களுக்கு ஏற்றவாறு முன்னெடுக்கலாம் என்ற ஒரு எதிர்பார்ப்புடன் அமெரிக்கத் தரப்பு எதிருக்கு இதை அறிவுறுத்தியிருந்ததாக தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த நிலையில் எதிரை உலகத் தமிழர் பேரவையில் இருந்து ஓய்வு பெறுமாறு புலம் பெயர் அமைப்புகளால் வலியுறுத்தப்பட்டதால் அவர் நாகரீகமாக ஒதுங்கிக் கொண்டதாகவும் தகவல். இப்படிப் பல முயற்சிகள் தோல்வியடைந்த பின்னணியிலேதான் 2013 இல் முன்னாள் அமைச்சர் அமரர் மங்கள சமரவீரவை மையப்படுத்தி சிங்கப்பூரில் நடத்தப்பட்ட மாநாட்டில் பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருந்தன.

(மறுபக்கம் பார்க்க)

இந்த மாநாட்டில் சுமந்திரன், சுரேன் சுரேந்திரன் மற்றும் கொழும்பில் இருந்து நிமல்கா பெர்ணாண்டோ போன்ற சிங்கள மிதவாதிகள், உள்ளிட்ட பலர் பங்குபற்றியிருந்தனர்.

இலங்கையர் என்ற அடையாளத்துடன் இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்பதை மையமாகக் கொண்ட சிங்கப்பூர் தீர்மானங்கள் ஏறத்தாழ இரண்டுவருடங்களாக இரகசியமாகப் பேணப்பட்டன. இருந்தபோதும் 2015 இல் இவை மெதுவாகக் கசிய ஆரம்பித்தன.

காலப் போக்கில் சிங்கப்பூர் தீர்மானமும் பிசுபிசுத்துப் போகவே சுரேன் சுரேந்திரன் உள்ளிட்டவர்கள் தமிழ்த் தரப்பின் வெறுப்புக்கு மேலும் உள்ளானார்கள்.

இதையெல்லாம் அறிந்து கொண்ட தன்னார்வ நிறுவனங்கள் தமது திட்டங்களை மீளாய்வு செய்து மேலும் இரகசியமாக செயற்பட்டனர். அந்த முயற்சியின் தற்போதைய வெளிப்பாடுதான் இமாலய பிரகடனம்.

ஒருபுறத்தில் உலகத் தமிழர் பேரவை எனும் தனிநபர்க்குழுவின் நகர்வுகள் மேற்கு நாடுகளில் இருக்கின்ற தன்னார்வ நிறுவனங்களையும் தென்னாபிரிக்காவையும் மையப்படுத்தி செயற்படும்போது, மறுபுறத்தில் பிரித்தானிய தமிழர் பேரவையானது பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர்களையும் இந்திய ஆளும் தரப்பான பா.ஜ.கா வையும் நோக்கிச் செயற்படுகின்றது.

அதுமட்டுமல்ல, பிரித்தானியத் தமிழர் பேரவை பிரிக்க முடியாத இலங்கைதான் தீர்வு என்று வெளிப்படையாகச் சொல்லத் தயங்கும். ஆனால் உலகத் தமிழர் பேரவை அவ்வாறு வெளிப்படையாகவும் கூறத் தயாராக இருக்கும்.

பிரித்தானிய நாடாளுமன்றத்தில் இரண்டு வாரங்களுக்கு முன்னர் இடம்பெற்ற ஈழத்தமிழர் தொடர்பான விவாதத்தை ஏற்படுத்துவதில் பிரித்தானிய தமிழர் பேரவையும் பின்னணியில் இயங்கியிருந்தது.

இந்த விவாதத்தில் சுயநிர்யணய உரிமை, இன அழிப்பு மற்றும் பொறுப்புக் கூறல் தொடர்பாக வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாத இலங்கை அரசு என்பவை சுட்டிக்காட்டப்பட்டுக் கேள்விகள் எழுப்பப்பட்டபோதும் பிரித்தானிய அரசின் பிரதிநிதி அவற்றுக்குப் பதிலளிக்காமல் சுற்றிவளைத்துப் பதிலளித்தார்.

குறிப்பாக போர்க்குற்றத்தில் நேரடியாக ஈடுபட்டதாகக் குற்றச்சாட்டப்படும் இராணுவத் தளபதிகளில் ஒருவரான சவேந்திர சில்வா போன்றவர்கள் மீது தடைகளைக் கொண்டுவரவேண்டும் என்று கேள்வி எழுப்பப்பட்டபோது அதற்குப் பகிரங்கமாகப் பதலளிக்க முடியாது என்ற தோரணையில் அவரது பதில் அமைந்திருந்தது.

பிரித்தானிய தமிழர் பேரவையையும் உலகத் தமிழர் பேரவை என்ற தனிநபர்க் குழுவையும் ஒப்புநோக்கினால், இரண்டும் ஏறத்தாழ சிறுமைப்பட்டுப் போயுள்ளன என்பதும், இவை இரண்டில் ஒன்று முழுமையாகவே தனிநபர்க் குழு என்பதும் மற்றையது ஓரளவுக்காவது மக்கள் தளத்துக்குக் கட்டுப்படும் போக்குடையது என்பதும் வெளிப்படும்.

ஆனால், அடிப்படைக் கோரிக்கைகளில் தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை அடகுவைக்கும் சர்வதேச தன்னார்வ நிறுவனங்களின் நோக்கங்கள் இந்த அமைப்புகளைக் குறிவைக்கும் போது ஏட்டிக்குப் போட்டியாகச் செயற்படும் ஒரு மனநிலையை இந்த இரண்டு அமைப்புகளைச் சார்ந்த முக்கிய நபர்களிடம் காண முடியும். இந்தப் பின்னணியில்தான் சுரேன் சுரேந்திரன் உலகத் தமிழர் பேரவையின் ஊடாக இமாலயப் பிரகடனம் என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளார்.

எதிர்வீரசிங்கம் தலைமைப் பதவியில் இருந்து விலகிச் சென்றதும் அப்போது ஜேர்மனியில் இருந்த அருட்தந்தை எஸ்.ஜே.இமானுவல் 2010 இல் உலகத் தமிழர் பேரவைக்குத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

எதிர்வீரசிங்கம் இணக்க அரசியலுக்குள் செல்கிறார் என்ற குற்றச்சாட்டை



முன்வைத்தே அப்போது அருட்தந்தை இமானுவல் உலகத் தமிழர் பேரவையின் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார்.

இலங்கை திரும்பியிருந்த எதிர், 2013 ஜனவரி மாதம் அப்போதைய வடமாகாண ஆளுநர் சந்திரசிறியின் கல்வி மற்றும் விளையாட்டுத்தறை ஆலோசகராக பதவி ஏற்றிருந்தன் மூலம் அவரின் இணக்க அரசியல் அடுத்த படிநிலையில் வெளிப்பட்டது.

**2010 இல் இலங்கையில் ஜனாதிபதித் தேர்தல் நெருங்கியபோது தமிழர்கள் சார்பான பொது வேட்பாளராக எதிரைப் போட்டியிடுமாறு அமெரிக்கத் தரப்புகள் அறிவுரை வழங்கியிருந்தன. இது அப்போதிருந்த உலகத் தமிழர் பேரவை என்ற அமைப்பின் அங்கத்துவ அமைப்புகள் பலவற்றுக்கும் கேள்வியை எழுப்பியது.**

அப்போது, இமானுவல் தமிழ்த்தேசிய நிலைப்பாட்டில் உறுதியாக இருந்தார். சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டியிலும் தெளிவுடன் செயற்பட்டார்.

ஆனால் தலைவராகப் பதவியேற்று அவர் அமெரிக்காவுக்குச் சென்றபோது அங்கு அறிவுறுத்தப்பட்டதன் பிரகாரம் "ஐக்கிய இலங்கை", "இலங்கையர் என்ற அடையாளம்" ஆகியவற்றைப் பேணி "இன அழிப்பு" விசாரணையைக் கைவிட வேண்டும் என்ற வல்லரசுகளின் புவிசார் அரசியல் - பொருளாதார வியூகங்களுக்கு ஏற்பச் செயற்படும் நிலைமைக்கு இமானுவல் அடிகளாரும் தள்ளப்பட்டார்.

அருட்தந்தை இமானுவல் வயது மூப்பின் காரணமாக செயற்பட முடியாமல் இருந்ததால் அதையும் சுரேன் சுரேந்திரன் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டார். பின்னாளில் தாயகம் திரும்பித் தற்போது யாழ் ஆயர் இல்லத்தில் இமானுவல் தங்கியுள்ளார். எதிர்வீரசிங்கமும் தாயகத்தில் குடியேறியுள்ளார்.

இந் நிலையில் தற்போது தனித்து இயங்கும் சுரேன் சுரேந்திரன் சர்வதேச தன்னார்வ நிறுவனங்களின் விருப்பங்களுக்கு ஏற்ப மிக இரசகியமாகத் தனிப்பட செயற்பட்டு இமாலயப் பிரகடனம் என்ற திட்டத்தை அரங்கேற்றியிருக்கிறார்.

அதன் முகவுரை மாத்திரமே ஊடகங்களில் வெளியிடப்பட்டிருக்கிறது. உண்மையான உள்ளடக்கத்தை வாசிப்பவர்களுக்குத் தான் அதன் ஆழமான சிக்கல்கள் தெரியவரும். முன்னர் சிங்கப்பூர் தீர்மானம் இரண்டு வருடங்களின் பின்னர் வெளியே கசிந்தது போன்று இந்தப் பிரகடனமும் ஒன்று இரண்டு வருடங்களின் பின்னர் கசிய முன்னதாக, தாமாகவே அதை அவர்கள் பகிரங்கமாக கையளித்து பேசி வருகிறார்கள்.

நோர்வேயின் முன்னாள் சமாதானத் தூதுவர் எரிக்சொல்ஹேய்ம் காலநிலை மாற்றம் குறித்த விவகாரங்களுக்கான இலங்கை ஜனாதிபதியின் ஆலோசகராகக் கடமையாற்றினாலும் அவர் சீனாவை முன்னிலைப்படுத்தியே செயற்பட்டும் பேசியும் வருகிறார்.



தமிழ் நாட்டுக்குள் எரிக்சொல்ஹேய்ம் சில நகர்வுகளை முன்னெடுத்தும் வருகிறார். புதுடில்லியுடன் உறவைப் பேணக்கூடிய முறையில் அவருடைய வியூகங்கள் அமைந்துள்ளன.

சுரேன் சுரேந்திரனைப் பொறுத்தவரை ஐக்கிய இலங்கைக்குள் அரசியல் தீர்வு என்ற விடயத்தில் எவருடனும் பேச வேண்டும் என்ற நிலைப்பாட்டை மீண்டும் மீண்டும் எடுத்துரைக்கிறார்.

அந்த அடிப்படையில் அமெரிக்காவுடன் மட்டுமல்ல இந்தியா, தென்னாபிரிக்கா, சீனா போன்ற நாடுகளுடனும் சேர்ந்து பயணிக்கக் கூடிய ஒருவர். இமாலயப் பிரகடனத்தை அவர் எல்லா இடங்களுக்கும் கொண்டு செல்லக்கூடியவர்.

இமாலயப் பிரகடனம் தொடர்பாக இந்தியாவுடனும் பேசக்கூடிய வாய்ப்புகளும் உண்டு. எவ்வாறாயினும் இத் திட்டம் இலங்கையை கையாளுவதற்கான இணக்க அரசியலை முன்னெடுக்கும் திட்டம்தான். அதில் மாற்றுக் கருத்தில்லை.

ஆனால் இத் திட்டம் உண்மையில் யாருக்கானது என்பது, சுரேன் சுரேந்திரனை இயக்கும் குறித்த சர்வதேச தன்னார்வ நிறுவனத்துக்கு மாத்திரமே தெரிந்திருக்கும்.

அதேநேரம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மங்கள சமரவீரவின் முயற்சியைத் தொடருகிறார் என்பதற்கும் இத் திட்டம் சிறந்த உதாரணம். சுமந்திரன் பின்னணியாக இல்லாதது போலக் காட்டிக்கொண்டு இருக்கிறாரா என்ற கேள்விகளும் ஐயங்களும் எழுப்பப்பட்டுள்ளன.

ஏனெனில் 2015 இல் ரணில் பிரதமராக இருந்தபோது ஒற்றையாட்சிக்குள் சமஸ்டி சாத்தியம் என்ற தோரணையில் முன்வைக்கப்பட்ட தீர்வுப் பொதிக்கு ஒப்பானதாகவே இமாலயப் பிரகடனத்திற்குரிய அணுகுமுறை அமைந்துள்ளது.

பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தை ரத்துச் செய்ய வேண்டுமென மார் தட்டிய மிலிந்த மொறகொட, இலங்கை ஒற்றையாட்சி அரசின் அமைச்சர்களுக்குரிய முழு அந்தஸ்துடனும் இந்தியாவில் இலங்கைக்கான தூதுவராகக் கடமையாற்றுகிறார். இவர் எரிக்சொல்ஹேய்முடன் மிக நெருக்கமானவர்.

ஆகவே இலங்கை ஒற்றையாட்சி என்ற கட்டமைப்புக்கு ஏற்றவாறும் வல்லாதிக்க நாடுகளின் புவிசார் அரசியல் - பொருளாதார நோக்கிலும் இமாலயப் பிரகடனம் அமைந்துள்ளது என்பது பகிரங்கமான உண்மை.

உலக அரசியல் ஒழுங்கு இன்று குழப்பியுள்ள நிலையிலும் பலஸ்தீனம் மீதான இஸ்ரேலின் இன அழிப்பு வெளிப்படுள்ளது. இதனால் "இரு அரசுகள்" என்பதுதான் தீர்வு என்ற கருத்து உலகில் தற்போது பலமாகப் பேசப்பட்டு வருகின்றது.

இப் பின்னணியில் ஏற்கனவே புஸ்வாணமாகிப் போய்விட்ட போலித் துவாரகா பற்றி இன்னும் தொடர்ச்சியாகப் பல முனைகளில் ஆராய்ந்து கொண்டிருக்கும் சில தமிழ் ஆய்வாளர்கள், இமாலயப் பிரகடனத்தின் பின்புலம் பற்றி ஆராயாமல் அமைதியாக இருப்பதன் நோக்கம் தான் என்ன?

இத் திட்டத்தை அமெரிக்காவும் சுவிஸ்லாந்து மற்றும் ஸ்கண்டிநேவிய நாடுகளும் பகிரங்கமாக வரவேற்றிருக்கின்றன. தென்னாபிரிக்க வாழ்த்தியுள்ளது.

அமெரிக்கா போன்ற மேற்கு மற்றும் ஐரோப்பிய நலன்கள் சார்ந்து செயற்பட்டு வரும் ஜேர்மன். சுவிஸ் நாடுகளை மையமாக் கொண்ட சர்வதேச தன்னார்வ நிறுவனங்கள், ஈழத்தமிழர் விவகாரத்தில் ஆங்கில மொழி பேசும் நாடுகளில் வாழும் புலம்பெயர் தமிழ் நபர்களையே இந்தத் திட்டத்தின் முதற்சுற்றில் ஈடுபடுத்தியிருப்பதையும் இங்கு நோக்க வேண்டும்.

இத் தன்னார்வ நிறுவனங்களின் தேவைக்கும் அந்த நிறுவனங்களில் தலைமையிலும் நடத்தப்படும் கூட்டங்களில் பங்கொள்ளாமல், தமிழ்த் தேசியக் கட்சிகளும் சிவில் சமூக அமைப்புகளும் புலம்பெயர்த் தமிழ் அமைப்புகளும் ஒரு புள்ளியில் ஒருமித்த குரலில் செயற்பட்டால் வல்லாதிக்க சக்திகளையும் இலங்கை அரசையும் தமது நலன்களுக்கேற்ப ஒரு சேர எதிர்கொள்ள முடியும்.

மாறியுள்ள உலகச் சூழலில், ஈழத்தமிழர் அரசியல் பேரம் பேசுவதற்கான ஏது நிலை மீண்டும் தோன்றவுள்ளது என்பதை ஈழத்தமிழர்கள் உணர்ந்து செயற்பட முன்னரே, உளவு மற்றும் தன்னார்வ நிறுவனங்கள் மறுமுனையில் செயற்பட ஆரம்பித்துவிட்டன என்ற ஆபத்தின் அறிகுறியே இந்த இமாலயப் பிரகடனம்.

தனித்தனியே இதை எதிர்கொள்ளாது, கூட்டாக எதிர்கொள்வதிலேயே ஈழத்தமிழர் அரசியற் பலம் சர்வதேச, பிராந்திய அரங்குகளில் மீண்டும் கருக்கொள்ள முடியும்.